மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேட் வகைகளுக்கும்
சிவகணேசன் பட்டுச் சோலை
41, பெரிய கடை யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ மணிப்புரி
★ பெனாரிஸ்
★ கஸ்குடி கொட்டன்
★ பிரியங்கா
மற்றும் அனைத்து மில் ஜவுளிகளுக்கும் விஜயம் செய்யுங்கள்
சிவகணேசன் பட்டுச் சோலை
41, பெரிய கடை யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 13 ஞாயிற்றுக்கிழமை (30 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 339

# காமினியின் இறுதி சடங்குகளில் அரச தரப்பினர் எவரும் இல்லை

## வன்செயல்களை தவிர்ப்பதற்கே அவ்வாறு செய்ததாக அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர். 30

சுதந்திரச் சதுக்கத்தில் நேற்று நடந்த காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்கில் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் ஜனாதிபதி விஜேதுங்காவைத் தொடர்ந்து அரசின் சார்பில் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவும் சபாநாயகர் கே. பி. இரத்னாயக்காவும் பேசுவதாக இருந்தது. ஆனால் அவர்கள் இருவரும் அங்கு சமுகமளிக்கவில்லை.

தற்போதுள்ள சூழ்நிலையில் தாம் இறுதிச்சடங்கு வைபவத்தில் கலந்து கொள்ள முடியாதிருப்பதாகக் கூறி உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமரசிறி தொடங்கொட காமினியின் குடும்பத்தினருக்குச் செய்தி ஒன்றை அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவினதும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினதும் — சொந்த முறையில் தனதும் — ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அமைச்சர் அந்தச் செய்தியில் தெரிவித்துள்

( 6ஆம் பக்கம் பார்க்க)



## ஸ்கொட்லண்ட்யார்ட்டுக்கு அனுப்பப்பட்ட தலை!

காமினியும் மற்றும் ஐ. தே. க. முக்கியஸ்தர்களும் கொலையுண்டதற்குக் காரணமான — தற்கொலைத் தாக்குதலை நடத்திய — பெண்ணினுடையது எனக் கருதப்படும் தலை ஒன்றின் படத்தை கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன. அப்படத்தையே அருகில் காண்கின்றீர்கள்.

இந்தத் தலை குறித்து ஆய்வு நடத்தி மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக அது ஸ்கொட்லண்ட்யார்ட்டிற்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

மேற்படி சந்தேகத்துக்குரிய பெண் கிராண்ட்பாஸ் கூட்டத்தில் இரண்டாம் வரிசையில் நிற்பதாகக் கூறப்படும் படம் ஒன்றையும் கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

அந்தப் படத்தில் முன்னால் நிற்பவர் ஒருவரால் மறைக்கப்பட்ட நிலையில் அப்பெண்ணின் தலையின் ஒரு பகுதி மட்டுமே காணப்படுகிறது.

## சிறிமா திஸாநாயக்காவின் நியமனம் சிரிப்புக்குரியது

### 'ராவய' ஆசிரியர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 30

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக திருமதி சிறிமா திஸாநாயக்கா தெரிவு செய்யப்பட்டிருப்பது சிரிப்புக்குரியதாகும் என்று ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் கூறியுள்ளார்.

இடைத் தேர்தல் ஒன்றுக்கு வேட்பாளராகத் தெரிவு செய்திருப்பின் மக்கள் அவரை ஏற்றுக் கொண்டிருப்பார்கள். ஆகக் குறைந்தது ஐ. தே. கவின் உறுப்பினராகக் கூட இல்லாத அவரை மிக முக்கியமான ஜனாதிபத் தேர்தலின் வேட்பாளராக நியமிக்க ஐ. தே. க. எடுத்த தீர்மானம் தவறானது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாயிரக் கணக்கானோர் மத்தியில் காமினியின் இறுதிச்சடங்கு

## மகன் நவீன் சிதைக்கு தீ மூட்டினார்

கொழும்பு, ஒக். 30

காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்குகள் கடுமையான பாதுகாப்புகளுக்கு மத்தியில் — பூரண அரச மரியாதைகளுடன் — நேற்று மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றன.

மகாவலி நிலையத்தில் இருந்து புறப்பட்ட பிரேத இறுதி ஊர்வலம் நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் சுதந்திரசதுக்கத்தைச் சென்றடைந்தது.

படையினரின் பாதுகாப்புடன் 90 நிமிடங்கள் நடந்த இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஹெலிக்கொப்டரில் இருந்து மலர்கள் தூவப்பட்டன

காமினி திஸாநாயக்காவின் புதல்வரும் குடும்ப உறவினர்களும் பிரேத ஊர்திக்குப் பின்னால் மக்கள் கூட்டத்துடன் நடந்து சென்றனர்.

சுதந்திர சதுக்கத்தில் முன்றடுக்கில் அமைக்கப்பட்டிருந்த சிதை ஐ.தே.க. கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இறுதி ஊர்வலம் சென்ற பாதைகளிலும் ஐ. தே. க. கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

பௌத்த மதத் தலைவர்கள் இறுதிக் கிரியைகளை நடத்தினர். இறுதிச் சடங்கு நடைபெறு முன்னர் மதத்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால நீடிப்புக்கு ஐ.தே.க ஆதரவளிக்காது

### உதவிச் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்குத் தாங்கள் ஆதரவளிக்கப்போவதில்லை என ஐ. தே. கவின் உதவிச் செயலாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா பக்கச்சார்பாக நடந்துகொள்கிறார் எனக் குற்றஞ்சாட்டிய காமினி ஜயவிக்கிரம பெரேரா அவர் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவினர் காமினியின் கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்திருக்கக்கூடாது என்றும் அவர் கூறினார். (இ-ஐ-6)

## ஐ.தே.க. நாடாளுமன்றகுழு கூட்டத்தில் பெரும் குழப்பம்

### எம். பிக்கள் கடும் வாக்குவாதம்

கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இக்கூட்டத்தில்தான் ரணில் விக்கிரமசிங்காவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பது என்ற முடிவு உத்தியோகபூர்வமாக எடுக்கப்பட்டது.

அதுதொடர்பான விவாதத்தின் போதே இருதரப்பாக பிரிந்து நின்ற எம். பிக்கள் வாக்குவாதப்பட்டனர் என்றும்—

சில எம். பிக்கள் ரணிலை கடுமையாக விமர்சித்தனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## சமாதான முயற்சிக்கு கனடா ஆதரவு

### காமினி கொலைக்கு கண்டனம்

கொழும்பு, ஒக். 30

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு எடுக்கப்படும் ஜனநாயக ரீதியிலான சமாதான முயற்சிகளுக்கு தமது நாடு ஆதரவளிக்கும் என்று கனடா வெளிவிவகார அமைச்சர் அன்ட்ரே குயில்டெல் தெரிவித்துள்ளார்.

தற்கொலைக் கொலையாளியின் குண்டுத் தாக்குதலுக்கு இரையாகி உயிரிழந்த எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்காவின் மறைவை ஒட்டி அவர் தமது அதிர்ச்சியைத் தெரிவித்து செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட கோழைத்தனமானதும் கொடூரமானதுமான இந்நடத்தையை கனடா வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் திரு. குயில்டெல் அந்தச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில் 2 பாரிய இராணுவ நடவடிக்கைகள்

கொழும்பு, ஒக். 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினர் இரு பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மூன்று தினங்களாக மயிலவெட்டுவான், சந்தனமடு, கூழாவடி, புலிபாய்ந்தகல் பிரதேசங்கள் அடங்கியதாக ஒரு இராணுவ நடவடிக்கையும் —

கும்பன்கேணி, திக்கோடை பழுகாமம் பிரதேசங்கள் அடங்கியதாக மற்றொரு இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இராணுவ நடவடிக்கைகள் குறித்த செய்திகள் அரசினால் வேண்டுமென்று இருட்டடிப்பு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கைகளின் போ பொதுமக்களின் உடைமைகளுக்கு பெரும் அளவில் சேதங்கள் விளைவிக்கப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## முச்சந்தி முரளி



பின் கதவால் ..... தேசிய பட்டியல் முறை நல்ல வாய்ப்பு பாருங்கோ.....

# குண்டுத்தாக்குதலை நடத்திய பெண் முன்னர் கைதாகி விடுவிக்கப்பட்டவர்

## ஐந்து கூட்டங்களில் பின் தொடந்தவராம்

கொழும்பு, ஒக். 30

காமினி திஸாநாயக்காவை பலி கொண்ட கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்புக்கு காரணமானவர் எனக் கருதப்படும் பெண் தற்கொலைத் தாக்குதல் நபரும் அவரது உதவியாளரான மூவரும் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் குற்றமற்றவர்கள் என்ற அடிப்படையில் விடுவிக்கப்பட்டவர்களாம்.

— இவ்வாறு கொழும்பு சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

சந்தேகத்துக்கு இடமான இப்பெண்ணே குண்டு வெடிப்பை நடத்தினார் என்று பொலிஸார் நம்புகின்றனர். அந்தப் பெண் குறித்து பொலிஸார் வெளியிட்டுள்ள சில விவரங்கள் வருமாறு:-

சம்பந்தப்பட்ட பெண் கடந்த 19 ஆம் திகதி முதல் ஹோமகம, கங்வெல, வெலிமடை, பண்டாரவளை ஆகிய இடங்களில் நடைபெற்ற காமினியின் கூட்டங்களை முதல் ஆசனத்தில் இருந்து பார்வையிட்டார். இதனைக் கவனித்த ஐ. தே. க. தலைவர்களான சுசில் முனசிங்க, பிரேமரத்ன குணசேகர, அல்மன் பீரிஸ் ஆகியோர் இது குறித்து கங்வெலவில் வைத்து பாதுகாப்புக்கு நின்ற படையினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து படையினர் அப்பெண்ணை விசாரணைக்கு உட்படுத்தினர்.

அதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த அந்தப் பெண் தான் காமினியின் தீவிர ஆதரவாளர் என்றும் தனக்கும் காமினியின் குடும்பத்துக்கும் நெருங்கிய பழக்கம் உண்டு என்றும் தெரிவித்த தாகச் சொல்லப்படுகிறது.

இதேவேளை —

குண்டு வெடிப்பை நடத்திய குழுவினருக்கும் அச்சம

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பு சிதறல் லண்டனுக்கு!

கொழும்பு, ஒக். 30

காமினி திஸாநாயக்கா உட்பட சுமார் 60 பேரின் உயிரைப் பலி எடுத்த குண்டின் சிதறல்கள் விரிவான பரிசோதனைக்காக லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

காமினியைக் கொலை செய்த உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடிக்க இங்கிலாந்தின் ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸ் துறையினரின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது.

லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்ட சமயமும் அரசு இதேபோன்று ஸ்கொட்லண்ட்யார்ட் நிபுணர்களின் உதவியை நாடியது தெரிந்ததே. [இ-4]

## தேசிய பட்டியல் மூலம் ஹேமா எம். பியாகலாம்

கொழும்பு, ஒக். 30

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் எம். பியாக ஹேமா பிரேமதாஸா நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிடமாகவுள்ள இடங்களில் ஒன்றுக்கு ஹேமாவை நியமிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிமா திஸாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் மேலிடத்துக்கு சிபார்சு செய்திருக்கிறார் என்று காமினி திஸாநாயக்காவின் மைத்துனர் டாக்டர் விக்கிரம வீரசூரியா நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (இ-4)

### வடக்கு கிழக்குப்பகுதியில்

## பெருமளவுபடையினர்பலி தெற்கில் இப்படி வதந்தி!

கொழும்பு, ஒக். 30

காமினி திஸாநாயக்கா படுகொலையுண்டதற்கு பின்னர் வடக்கு-கிழக்கு பகுதியில் படையினர் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளனர் என்று தென்பகுதியில் வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. இது ஆதாரமற்றது.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி முதல் வடக்கு - கிழக்கு பகுதியில் படையினர் எவரும் கொல்லப்படவில்லை என்றும் —

வதந்திகளை பரப்புவர்கள் பற்றி மக்கள் எச்சரிக்கையாக இருப்பதுடன் அப்படிப்பட்டவர்கள் குறித்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும்—

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஓ-எ)

## இங்ஸ்லி முத்தையா காலமானார்

கொழும்பு, ஒக். 30

இலங்கை மெதடிஸ்த மகா சங்கத் தலைவர் அருட் திரு கலாநிதி இங்ஸ்லி முத்தையா கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று மாலை காலமானார்.

அதிருட் திரு கலாநிதி இங்ஸ்லிமுத்தையா சமீப காலமாக சுகவீனமுற்றிருந்தார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக மதத்தலைவர்கள் மேற்கொண்டிருந்த சமாதான முயற்சிகளில் இவர் பெரும் பங்கு வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

தரம் வாய்ந்த ரொபி இனிப்பு வகைகள் விற்பனை செய்வதற்கு அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை. கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

சிறிகண்ணா தொழில் அகம்,
சோதி வேம்படி லேன், மானிப்பாய்.

(7982)



## அச்சுக்கோர்ப்பாளர் தேவை

அச்சுக் கோர்ப்பதில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உடையவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

தொழில் திறன் மற்றும் நற்சான்று அத்தாட்சிப் பத்திரங்களுடன் 01-11-94 செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முகாமையாளர்(ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## புலிகளின் குரல் வானொலியில்

**30 — 10 — 1994**
**ஞாயிறு இரவு**

- 8-01 — இசையரங்கம்- பாடுபவர்: செல்வி கே. மதி
- ★ 8-20 — தாயகப் பாடல்கள்.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம்- பொ. கணேசமூர்த்தி எழுதும் 'இலங்கைமண்' 45 ஆம் அங்கம்.

**31 — 10 — 1994**
**திங்கள் காலை**

- ★ 7-02 — மா! வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை.
- ★ 7-30 — செய்திகள்.
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## 14 நாள் விளக்கமறியலில் இருந்த றோஹணவின் மைத்துனர் புதனன்றுவிடுதலையானார்!

படுகொலையுண்ட ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீராவின் மைத்துனர் டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோ 14 நாள் விளக்கமறியலின் பின்னர் கடந்த புதனன்று கம்பஹா நீதிவான் திருமதி மஹேஷி குணதிலகாவினால் நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

தமது தலைமையிலான ஜே. வி. பிக்கு தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம் அளிக்க மறுத்ததை எதிர்த்து இவர், தேர்தல் திணைக்கள அலுவலகத்துக்குள் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்றபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து 2 வருட நன்னடத்தைப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

(ஒ—எ—6)


## DIPLOMA IN NURSING
## தாதியர் பயிற்சி நெறி

10 - 11 - 1994 இல் ஆரம்பமாகின்றன.

1. கல்வித் தகைமை க.பொ.த. (சாதாரணம்)
2. காலம் 6 மாதங்கள்
3. விசேட மருந்தியல், பார்மஸி பாடங்கள் உள்ளடக்கப்பட்டன.
4. வைத்தியசாலை செய்முறைப் பயிற்சி
5. மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்க்கு இலவசக் கல்வி,

**சாயி**
**மருத்துவக்கல்லூரி**

இல- 10,
பருத்தித்துறை வீதி,
(அரச தாதியர் பாடசாலை முன்பாக)
யாழ். நகர்

[சி-9397]



பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்
குடும்பத்துடன் பார்த்து மகிழ

★ நெல்லியடி மகாத்மா,
★ சாவகச்சேரி தெய்வேந்திரா

ஆகிய திரையரங்குகளில்
அகன்ற வெண்திரையில்

**நிதர்சனமும்,**
**கலை, பண்பாட்டுக்கழகமும்**
இணைந்து உருவாக்கிய

**திரு. பொ. தாசனின்**
**"இன்னும் ஒரு நாடு"**

தினசரி 6-30 மணி
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30மணி

[சி-9346]


## குளத்தில் சடலம்

அரியாலை,மாம்பழம் சந்திப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் காவல் துறையினரால் நேற்றும்முன்தினயாழ்ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 28 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞனின் சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.


## 45-ம் நாள் நினைவஞ்சலி

எவர்க்குமினியர்
அமரர்
வைத்திய கலாநிதி
**சுப்பிரமணியம் பொன்னம்பலம்**

போற்றலுறு புல்லாங் குழலினிசை புறங்காட்ட
ஏற்றமுறச் செய்சத் திரசிகிச்சை மனம்மறுக
தோற்றமளி சுற்றம் தொழுதுசெய லற்றிருக்க
நேற்றிருந்தீர் ஐயா! எங்களைவிட் டெங்குற்றீர்!

பொன்னம்பலஞ் சென்ற பொன்னம்பலப் பெரியீர்
இன்னஞ்சிகிச் சையங் கியலுவதோ இணைந்தகுலப்
பொன்னனையாள் கமலா மாயாகல் யாணியிசை
கன்னலென வேயினிக்கக் கனிந்தொருகால் வாரீரோ!

கருகம்பனை இராஜராஜேஸ்வரி -
சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்,
உலர் வலய சேமிப்புக் கழகம்,
கருகம்பனை

(7688)


# ஆய்வு நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்

**இடம்: யாழ். இளங்கலைஞர் மன்றம், நல்லூர்**

**காலம்: 30-10-1994 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி**

### ஆய்வு நூல் வெளியீடு

நூல்: **'ஆனையை அடக்கிய அரியாத்தை'**

ஆசிரியர்: செல்லையா மெற்றாஸ்மயில்
தலைவர்: திரு. தி. சபாரத்தினம்
(கூட்டுறவு உ. ஆணையாளர் பனை தெ. வள. பிரிவு வடபிராந்தியம்)

### சிறப்பு விருந்தினர்கள்:

- ★ புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், த. வி. பு. கலை, பண்பாட்டுக் கழகம்)
- ★ தமிழ் அன்பன் (ஜவான்) (பொறுப்பாளர் நிதர்சனம்)
- ★ பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப் பீடாதிபதி, யாழ். பல்கலைக் கழகம்)
- ★ பேராசிரியர் கா. சிவத்தம்பி (தலைவர், நுண்கலைத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)
- ★ பேராசிரியர், அ. சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை - யாழ். பல்கலைக்கழகம்)
- ★ செல்வி. தி. பெரியதம்பி (கல்விப்பணிப்பாளர், வலயம் - 1)
- ★ திரு. கந்தசாமி (கல்விப்பணிப்பாளர், வலயம் - 2)
- ★ திரு. நா. சுந்தரலிங்கம் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், வேலணை ஊர்காவற்றுறை)
- ★ திரு. செ. கோடீஸ்வரன் (சட்டத்தரணி)
- ★ திரு. இ. சுந்தரலிங்கம் (முன்னைநாள் கல்விப் - பணிப்பாளர்)
- ★ திருமதி ப. திலகநாயகம்போல் (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்
- ★ திரு. வே. பொ. பாலசிங்கம் (ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்)
- ★ திரு. க. குணராசா (செங்கை ஆழியான்)
- ★ திரு. து. வைத்திலிங்கம் (தலைவர், யாழ். இலக்கிய வட்டம்)
- ★ திரு. சுந்தரம். டிவகலாலா (பி. உ. உ. ஆணையாளர், யாழ். கிளிநொச்சி)
- ★ திரு. இ. இளங்கோ (உதவி பிரதேச செயலாளர், நல்லூர்)
- ★ திருமதி சரோஜா - சிவச்சந்திரன் (இயக்குநர், மகளிர் அபிவிருத்தி நிலையம்)
- ★ செம்பியன் செல்வன் (செயலாளர், எழுத்தாளர் ஒன்றியம்)
- ★ திரு. சு. போ. பூராசா (அதிபர், புங்குடுதீவு அ. மி. த. க. பாடசாலை)
- ★ செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை
- ★ வைத்திய கலாநிதி வை. தியாகராசா (போஷகர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)
- ★ திரு. தார்சீசியஸ் (அதிபர்) (போஷகர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)
- ★ திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) (போஷகர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)
- ★ திரு. சி. மகேந்திரன் (போஷகர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)
- ★ திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

### நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்: திரு. பொ. மாசிலாமணி (தலைவர், வேலணை கூட்டுறவுச் சங்கம்)
திரு. சூ. சிறில் (தலைவர், யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம்)

மௌன அஞ்சலி
தமிழ்த்தாய் வணக்கம்
வரவேற்புரை: திரு. வ. சு. ஞானச்செல்வம் (தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்)
ஆசியுரை, நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்
பாதநாட்டியம்: கல்வித் திணைக்கள உதவிப்பணிப்பாளர் செல்வி நளாயினி - இராசதுரையின் மாணவிகள்.
டில்ருக்ஸி சிவராசா — நில்ருக்ஸி சிவரர்சா ஆகியோர்
தலைமையுரை:
★ சிறப்பு விருந்தினரின் வாழ்த்துரை, பாராட்டுரை இடையிடையே கூத்திசை, மரபு நாடக இசைப்பாட்டுக்கள்

கூத்திசைப்பாட்டு;
அண்ணாவியார்: வின்சண்டி போல் நாவாந்துறை
" செபஸ்தியாம்பிள்ளை டானியல் (பெலிக்கான்) நாவாந்துறை
" ம. சுவாமிநாதன் குருநகர்
" ஆ. மரியதாஸ் குருநகர்
" வரப்பிரகாசம் கொழும்புத்துறை
" எஸ். செபஸ்தியாம்பிள்ளை சுண்டிக்குளி

பாஷையூர், நாட்டுக்கூத்து வளர்ச்சிக்கழகச் சார்பில்:
திரு, ஞா. லோறன்ஸ் (வீரன்)
செல்வி பா. அமுதா
திரு. வே. சாள்ஸ் நாவாந்துறை
திருமதி தயாழினி மோகன்
திரு. யோ. வின்ஸ்லோ [டினேஸ்]
திருமதி இராசா பேபி (குருநகர்)
செல்வி சுகந்தினி ஞானச்செல்வம்
திரு. செல்லையா மெற்றாஸ்மயில்

மரபு நாடக இசைப்பாட்டு:
நடிககலாமணி வ. செல்வம் அரியாலை
செல்வி பி. அனுரா நாவாந்துறை
இ. கனகரத்தினம், நாயமார்க்கட்டு

மிருதங்கம்: இராசசிங்கம் மணியந்தோட்டம்
ஆர்மோனியம்: மாஸ்ரர் எம். எம். ராஜா பாஷையூர்

கலைஞர்கள் கௌரவிப்பு
கௌரவம் பெறுபவர்கள்: ஓவியக் கலைஞர் "ரமணி" தங்கப் பதக்கம் வழங்கி முன்னைநாள் கல்விப் பணிப்பாளர், இ. சுந்தரலிங்கம் கௌரவிப்பார்.
மயிலிட்டி தெற்கு கிராமிய கலைஞர் வ. குருசாமி தங்கப் பதக்கம் வழங்கி திருநெல்வேலி சிற்ப சக்கரவர்த்தி சபதி ஆறுமுகம் ஜீவரத்தினம் ஆச்சாரியார் கௌரவிப்பார்.

நூல் அறிமுகவுரை: திருமதி சரோஜா சிவச்சந்திரன்
நூல் வெளியீட்டுரை: 'சொக்கன்'
நூல் பிரதிகள் வழங்கல்:
முதற் பிரதி பெறுபவர்: வே. சிற்சபேசன் (தலைவர், யாழ். வணிகர் கழகம்)
சிறப்புப் பிரதி பெறுபவர்:
அறிஞர்கள், பெரியோர்கள், அதிபர்கள், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், ஆதரவாளர்கள்
மதிப்பீட்டுரை: செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை
கருத்துரை: திருமதி மனோன்மணி சண்முகதாஸ் (ஆய்வாளர் கக்சுயின் பல்கலைக்கழகம் ஜப்பான்)
சிறப்பு விருந்தினர்கள் உரை:
நன்றியுரை: திரு. வ. அ. செல்வராசா (பொருளாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)

### கலை நிகழ்ச்சிகள்

கட்டுவன் வ. குருசாமி அவர்களின்
★ **ஒயிலாட்டம் (லேஞ்சி ஆட்டம்)**

பங்கு கொள்ளும் கலைஞர்கள்
வ. குருசாமி
செ. மெற்றாஸ்மயில் (நூலாசிரியர்)
த. தவராசா (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி)
இ. கிருஷ்ணகாந்தன் (தொழில் நுட்பக் கல்லூரி)
வி. துஸ்யந்தன் (வசாவிளான் மகா வித்தியாலயம்)
அ. அன்புராஜ் (யூனியன் கல்லூரி)
அ. அருள்ராஜ் (யூனியன் கல்லூரி)
இ. உதயசுதர்சன் (யூனியன் கல்லூரி)

★ **வசந்தன் நாடகம் (கோலாட்டம்)**

வி. துஷ்யந்தன் அ. அன்புராஜ்
அ. அருள்ராஜ் இ. உதயசுதர்சன்
த. பிரசனாத் (மல்லாகம் ம. வி.)
வி. தபோதரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி)
பா. முகுந்தன் (யூனியன் கல்லூரி)
தி. அச்சுதன் (யூனியன் கல்லூரி)

பின்னணி — பக்கப் பாட்டு:
ஆ. வ. சுந்தரலிங்கம் (கிராம சேவையாளர், கொக்குவில் தென்கிழக்கு)
வ. குருசாமி — மயிலிட்டி தெற்கு
கு. சுகுமார் — மயிலிட்டி தெற்கு
டோலக்; கு. சிறீதர் — மயிலிட்டி தெற்கு
ஆர்மோனியம்: திரு. மகேஸ்வரன்

● குறிப்பிட்ட நேரத்தில் விழா ஆரம்பிக்கப்பட இருப்பதால் முன்கூட்டியே வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்பாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:
கால அவகாசம் கிடைக்காமையால் நூலாசிரியரின் அறிமுகமான பலருக்கு தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியவில்லை. இவ்வறிவித்தலை ஏற்று சகலரும் பங்கு கொண்டு சிறப்பிக்கவும்.

— **பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்**

வீடியோ ஒளிப்பதிவு அன்பளிப்பு:
கலக்சி புகைப் படச்சேவை
யாழ்ப்பாணம் / வவுனியா


நிகழ்வு சிறப்புற வாழ்த்துகிறோம்.
**மெடி எயிட்ஸ் மருந்தகம்**
644, பருத்தித்துறை வீதி, நல்லூர்.



நிகழ்வு சிறப்புற வாழ்த்துகிறோம்.
**போஸ்கோ**
இல. 3, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.



நிகழ்வு சிறப்புற வாழ்த்துகிறோம்.



**ஜி. எஸ். லிங்கநாதன்**
**அன். கோ.**
**ச. லிங்கநாதன்**
**வண்ணச் சோலை**
13, 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
[சி-9562]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காமினியின் கடைசி நிமிடங்கள் கலகலப்பாக இருந்தன!

# வாண வேடிக்கை பூவெடிகளுக்கு மத்தியில்

# கொழும்பை அதிர வைத்த நெருப்புப்பந்து

## கிராண்ட்பாஸில் நள்ளிரவில் வீதி எங்கும் பிணக்குவியல்!!!

ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி. கொழும்பில்—

ஏராளமான எதிர்பார்ப்புகள், கனவுகள், திட்டங்களுடன் விடிந்தது அந்தக் காலைப் பொழுது.

அன்று நடுநிசியில் நடக்கப் போகும் பயங்கரத்தை கிஞ்சிற்றேனும் உணராத நிலையில் தனது வழமையான காலைக் கடமைகளில் ஈடுபடுகிறார் அவர்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த சோர்வை நீக்கி புதுத் தெம்பு கொடுத்தவர் என்று அவரது ஆதரவாளர்களால் வர்ணிக்கப்பட்டவர் அவர்.

''கடந்த தேர்தலில் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் ஐ. தே. கவுக்கு கிடைத்த வாக்குகளுடன் ஒவ்வொன்றிலும் மேலதிகமாக 36 வாக்குகள் மட்டும் கிடைத்தாலே போதும் நான் ஜனாதிபதியாகி விடுவேன்'' என்ற சாதுர்யமான பிரசாரம் மூலம் ஆதரவாளர்களை உற்சாகப் படுத்தியவர் என்றும் அவர் வர்ணிக்கப்பட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகாவிற்கு பலத்த போட்டியாக அமைவார் என்பது அவரைப் பற்றி அவதானிகள் சொல்லிய ஆருடம்.

அவர் தான் காமினிதிஸாநாயக்கா.

அவரைப் பற்றிய மதிப்பீடுகள், ஆருடங்கள் எல்லாம் அன்று நள்ளிரவுடன் முடிந்துவிட்டன.

இந்தத் தேர்தலில் இல்லாவிட்டாலும், அடுத்த தேர்தலிலாவது ஆட்சியை கைப்பற்றி நாட்டின் தலைவராக வரக் கூடிய ஒருவர் என்று கருதப்பட்டவரின் சரித்திரம் மூடப்பட்டுவிட்டது.

### நகைச்சுவையாக பேசினார்

இவற்றையெல்லாம் அன்றையதினம் காலையில் எழுந்திருக்கும் போது காமினி திஸாநாயக்கா நினைத்திருக்க மாட்டார்தான். காமினி அன்றைய தினம் மிகவும் கலகலப்பாக இருந்தார்; மிகவும் நகைச்சுவையாக பேசினார் என்று அருடன் நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரப்பணி மும்முரமாக நடைபெற்று வரும் நேரம் அல்லவா? நேரத்துடன் போராடுகின்ற காலம்.

முதல்நாள் பிரசார வேலைகள் முடிந்து நள்ளிரவிற்குப் பின்னரே நித்திரைக்குப் போனாலும், அதிகாலையிலேயே எழுந்து காலைக் கடமைகளை முடித்து தன்னை சந்திக்க வருபவர்களை சந்தித்து விட்டு, அன்றைய தின பிரசார வேலைகளிற்கு புறப்பட்டு விடுவார் காமினி.

அந்த ஞாயிற்றுக்கிழமை காலை — காலிமுகத்திடலின் அருகிலுள்ள இராணுவத்தினருக்கான ஹெலிக்கொப்டர் இறங்கு தளத்தில், ரஷ்ய தயாரிப்பான (45 ஆசனங்களை கொண்ட) ஹெலிக்கொப்டர் ஒன்று அவருக்காக காத்து நிற்கிறது.

அந்த இடத்திற்கு அவசர அவசரமாக வந்த காமினி, ஹெலியில் தாவி ஏறிக் கொள்கிறார். ஆசனத்தில் அமர்ந்தபடியே கைக்கடிகாரத்தைப் பார்க்கிறார். நேரம் 9 மணி. அடே 9 மணிக்கு ''யுக்திய'' பத்திரிகைக்கு பேட்டி தருவதாக சொல்லியிருந்தேனே'' என்று கூறிய படி அமர்ந்து கொள்கிறார்.

ஹெலிக்கொப்டரின் விமானி ஒரு ரஷ்யாக்காரர். அவர் ஹெலியை இயக்குகிறார். ஹெலி கண்டியை நோக்கிப் பறக்கிறது.

கண்டியில் ஹெலி இறங்க, அங்கே 'யுக்திய' செய்தியாளர் காத்திருக்கிறார். அவரை தனது காரில் ஏற்றி பேட்டி கொடுத்தவாறே அஸ்கிரிய பீடத்தை நோக்கி போகிறார். அங்கே அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து அளவளாவி ஆசிபெற்றுவிட்டு, அடுத்து மல்வத்தை பீடாதிபதியை சந்தித்து நீண்ட நேரம் உரையாடி அவரிடமும் ஆசி பெறுகிறார்.

அடுத்து தலாத்துஓய என்ற இடத்திற்கு சென்று தேர்தல் கூட்டத்தில் பேசினார். தொடர்ந்து ஹரிஸ்பத்துவ என்ற இடத்திற்கு ஹெலியில் செல்கிறார்.

### விடாது பிரசாரம்

அங்கே பூஜாப்பிட்டிய மகா வித்தியாலயத்தில் ஹெலி இறங்குகிறது. அங்கிருந்து மராத்துகொடவுக்கு ஓட்டோக்கள், சைக்கிள்களில் ஊர்வலமாக அழைத்து செல்லப்படுகிறார். தொடர்ந்து கண்டி தங்கொல்லவில் உள்ள தனது வீட்டில் மதிய போசனம் சாப்பிடுகிறார்.

தொடர்ந்து ஹிரியாலவுக்கு அருகில் உள்ள கோகருல்ல என்ற ஊரில் பிரசாரம் செய்து விட்டு பிங்கிரியவுக்கு அருகில் உள்ள தும்மலசூரிய என்ற இடத்திற்கு மாலை 5-45 மணியளவில் வந்து சேருகிறார். புலத்தமழையின் மத்தியிலும் 10 ஆயிரம் பேர் வரை அங்கே காத்து நிற்க அங்கு உரையாற்றுகிறார்.

மாலை 6-45 மணியளவில் மீண்டும் ஹெலிக்கொப்டர் அருகே வந்த போது ஹெலியின் விமானி காமினியை தடுத்தார். காலநிலை மிக மோசமாக உள்ளது. வானம் மேக மூட்டமாக உள்ளது. 'எனது ஹெலியில் இரவு நேரத்தில் பார்க்கக் கூடிய திசையறி கருவியும் இல்லை. எனவே பயணம் செய்வது சிரமம்— என்றார் விமானி.

ஆனால் காமினியோ' கிராண்ட்பாஸில் நடைபெற உள்ள கூட்டம் மிக முக்கியமானது. நான் கட்டாயம் செல்ல வேண்டும் எது நடந்தாலும் பரவாயில்லை ஹெலியை எடுக்கவும் என்று வற்புறுத்தினார்.

விமானி தயங்கினார். அப்போது அருகே இருந்த விழா ஏற்பாட்டாளரான காமினி ஜெயவிக்ரம பெரேரா தரை மார்க்கமாக கொழும்பு செல்ல ஆயத்தங்களை மேற்கொண்டார்.

ஆனால் காமினி, ''அது தாமதமாகி விடும். அங்கே ஏராளமான மக்கள் எனக்காகக் காத்திருப்பார்கள். ஹெலியை எடு'' என்று விதவாதமாக நின்றார். விதி அவரை அவசரமாக அழைத்தது!

உடனே விமானி அருகேயிருந்த பொலீஸ் நிலையத்திற்கு சென்று விமான நிலை

**- ராஜ்குமார் -**

யத்துடனும் காலநிலை அவதான நிலையத்துடனும் தொடர்பு கொண்டார்.

நேராக கடற்கரைப்பகுதிக்கு வந்து அங்கிருந்து கொழும்பு நோக்கி வருவது சுலபம் என அறிவுறுத்தல் கிடைத்தது. அதனையடுத்து ஹெலிபுறப்பட்டது இரவு8-45 மணியளவில் ஹெலிகாலிமுகத் திடலை அடைந்தது.

அங்கிருந்து நேரடியாக கொள்ளுப்பிட்டியில் உள்ள தமது இல்லத்திற்கு சென்றார் காமினி அங்கே தேநீர் அருந்திவிட்டு, அரைமணி நேரம் தேர்தல் அலுவல்கள் தொடர்பாக உரையாடினார்.

### கடைசிக் கூட்டத்திற்கு புறப்படுகிறார்

பின்னர் அங்கிருந்து தனது ''பென்ஸ்'' காரில் கிராண்ட்பாஸில் உள்ள தொட்டலங்கவுக்கு (பாலத்துறைக்கு) தமது ''கடைசிக்'' கூட்டத்திற்காகப் புறப்பட்டார்.

தொட்டலங்கவில் உள்ள சந்தைக்கு முன்புறத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. குண்டுமீட்கும் நிபுணர்களின் தீவிர சோதனையின் பின் பி. ப. 4-30 மணியளவில் கூட்டம் ஆரம்பமாகியது. முதலில் ரணில் விக்ரம சிங்கவும் சுமார் 7-30 மணியளவில் அநுராவும் உரையாற்றினர் தொடர்ந்து பல பிரமுகர்கள் உரையாற்றினர்.

வழமையாக காமினி பேசி முடித்து உடனடியாக புறப்பட்டு சென்று விடுவார். அதன் பின்னரே ஒலி பேசுவது வழக்கம். ஆனால் அன்றைய தினம் தன்னை முதலிலே பேச அனுமதிக்கும்படி கூட்ட ஏற்பாட்டாளரிடம் ஒஸி அபயகுணசேகராகேட்டிருந்தார். அதன்படி காமினிக்கு முன்னர் ஒஸி பேச ஆரம்பித்தார்— ஒஸி பேசிக் கொண்டிருந்த வேளை பிரேமச்சந்திராவுடன் காமினி தனது பென்ஸ்காரில் மேடைக்கு அருகிலேயே வந்து இறங்கினார்.

### வாண வேடிக்கை

காமினியைக் கண்டதும் பட்டாசுகளும், வாண வேடிக்கைகளும்பூவெடிகளும் கொளுத்தி ஆதரவாளர்கள் தமது வரவேற்பைத் தெரிவித்தனர். இதனால் ஒஸி பேச முடியாமல் தடங்கல் பட்டு நிற்க, நேரம் ஓடிக்கொண்டே இருந்தது.

அப்போது காமினி எழுந்து, ஒஸி தொடர்ந்து பேச அனுமதிக்குமாறு, ஆதரவாளர்களிடம் கேட்டார். வெடிச் சத்தங்கள் நின்றன —

அப்போது காமினி, 'வளைகுடா யுத்தம் முடிந்து விட்டது. இனி ஒஸி பேசுவார்'' என்று நகைச்சுவையாகக் கூறிக்கொண்டே கதிரையிலே அமர்ந்தார்,

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்க இசைக்குழு ஒன்று இடையிடையே சிங்களப் பாடல்களை பாடி மக்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது.

விழா அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த சிங்கள நடிகர் திலக்குமார் ரட்ணாயக்காவை அருகே அழைத்து, சிங்கள சிறுவன் ஒருவனால் பாடப்பட்ட ''அபே ஜாதிய அபிமானே'' (தேசிய அபிமானம்) என்ற பாடலை தன் விருப்பமாக பாடச் சொல்லும்படி கேட்டார்.

### பாட்டை ரசித்து கேட்டார்

அப்போது அந்த நடிகர் காமினியின் விருப்பத்தை துண்டொன்றில் எழுதி இசைக்குழுவிடம் அனுப்பினார். ஒஸி பேசி முடிந்ததும் அந்தப் பாட்டு பாடப்பட்டது. காமினி அந்தப் பாடலை மிகவும் ரசித்துக் கேட்டார். தாமும் அந்தப் பாடலை முணுமுணுத்தார்.

பாடல் முடிந்ததும், தனது இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி கைதட்டி, பாடலைப் பாடியதற்காக தனது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தார். இசைக் குழுவை பார்த்து சிரித்தபடி கை அசைத்தார்.

அதனை அடுத்து பேச ஆரம்பித்தார் காமினி.

சந்திரிகாவின் அரசு தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று சாடினார். விடுதலைப் புலிகளுடனான பேச்சு, பாதுகாப்புப் படையினரைப் பற்றி அண்மையில் சந்திரிகா வெளியிட்ட கருத்து என்பன பற்றி தனது அதிருப்தியை வெளியிட்டார். தமது எதிர்காலத் திட்டங்களையும் விளக்கினார்.

தொண்டமான் தற்பொழுது நடுநிலைமை வகிக்கிறார். ''அவரது வாக்குகள் முழுவதையும் பெற்றால் நான் தான் ஜனாதிபதி. இதற்காக முக்கிய திட்டங்கள் சிலவற்றை தயாரித்து வைத்திருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்ட கையிலே கட்டியிருந்த மணிக்கூட்டை பார்த்தார். நேரம் 12-10 ஆகிவிட்ட நிலையில், ''நான் வழமையாக உங்களுக்கு இரவு வணக்கம் தான் சொல்வேன். ஆனால் இன்று காலை வந்தனங்கள் சொல்லி விடை பெறுகிறேன் என்றபடி தனது உரையை முடித்தார்.

இறுதியாக மக்களுக்கு கையை அசைத்துக் காட்டியபடி கொஞ்சம் கொஞ்சமாக பின்னோக்கி நகர்ந்தார். அப்போது மேடையில் இருந்த அனைவரும் எழுந்து கொண்டனர். விழா அமைப்பாளரான நடிகர் திலக்குமார் ரட்ணாயக்காவை அழைத்து இரண்டு பாடல்கள் பாடிவிட்டு கூட்டத்தை நிறைவு செய்யுங்கள் என்று சொன்னபடி மேடையை விட்டு கீழே இறங்கினார் காமினி.

### காமினிக்கு கைகொடுத்தனர்

மேடையிலே இருந்த அனைவரும் இறங்கி வந்து காமினிக்கு கைகொடுத்தனர். வாழ்த்துக் கூறினர்.

அப்போது, பெரும் எண்ணிக்கையான வாணவெடிகளும், பூவெடிகளும் கொளுத்தப்பட்டன. காமினியின் மகாவலி திட்டத்தை விளக்கும் பூவெடிகளும், காமினி ஜனாதிபதியாகட்டும் என சிங்களத்திலே குறிப்பிடும் வடிவானதுமான பூவெடிகளும் கொளுத்தப்பட்டன.

அவற்றை ரசித்துப் பார்த்தபடி வந்த காமினி, மக்களின் முன் வந்து கையை உயர்த்தி அசைத்து மக்களின் 'காமினி ஜயவேவா' [காமினி வெற்றி அடையட்டும்] 'காமினி ஜனாதிபதி வேவா' [காமினி ஜனாதிபதியாகட்டும்] என்ற கோஷங்களை ஏற்றுக் கொண்டார்.

### மேடையின் முற்புறம் நெருப்புப் பந்து!

மேடையில் இசைக்குழு பாடல் ஒன்றை பாடத்தயாரானது. அப்போது மிகப்பயங்கரமான சத்தத்துடன் நெருப்புப் பந்து ஒன்று மேடையில் முன் புறமிருந்து மேலேழும்பியது. கூடியிருந்த மக்கள் ஓடத்தொடங்கினர்.

அவர்களை விலக்கிப் பார்த்த போது உடல் முழுவதிலும் காயங்களுடன் காமினியும், வீரசிங்க மல்லிமாராய்ச்சியும் மேடையி

(5 ஆம் பக்கம் பார்க்க)


## திரைப்படப் பிரியர்களுக்கு மற்றுமோர் அரிய விருந்து

# விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும்

இணைந்து

## திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாக்கிய

# பிஞ்சு மனம் (வண்ண முழுநீளப்படம்)

மரணம் வாழ்வின் முடிவல்ல, தாயகமே தாகம் ஆகிய முழுநீளப்படங்களின் வரிசையில்.....

ந. கேசவராசனின் ★ கதை ★ திரைக் கதை ★ வசனம் ★ இயக்குதலில் உருவான

எம் மண்ணின் கதை **பிஞ்சு மனம்**

நடிகர்கள்:
சேரன் சிவராஜா
தனபாலன்
மதனசேகரன்
தைரியநாதன்
அனந்தராசா

★ படப்பிடிப்பு — எழிலன்
★ படத்தொகுப்பு — சேகர்
★ பாடல் ஒலிப்பதிவு — கிருபா
★ பாடல்கள் — புதுவை இரத்தினதுரை
★ இசை — ராஜன்ஸ் இசைக்குழு

நடிகைகள்:
திருமதி மங்கையர்க்கரசி
திருமதி தங்கேஸ்வரி
மழலைத்தாரகை கார்த்திகா

பாடியவர்கள்:
திரு. குமாரசாமி, செல்வி விஜியலட்சுமி

காணத்தவறாதீர்கள்.....!

வெகு விரைவில் தமிழீழ திரை வானில் உலாவர இருக்கின்றது ''பிஞ்சுமனம்''

திரைப்படப் பிரிவு,
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்,
நடுவப்பணியகம், தமிழீழம்.

(சி-9555)

விளம்பர அன்பளிப்பு: - யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கண்ணாடி சோகேஸ் (கடை), மெத்தைகள், கட்டில்கள், சோக்கேஸ், வாங்குகள், பிரம்பு கூடைகள் விற்பனைக்கு உண்டு. கதிரைகளும் பின்னி கொடுப்பவர்கள்: ராஜன் பின்னல் அகம், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-9542)

சில்க்கி, பிறேசில், பாமாஸ், பிறாமா, போலிஸ், சில்வர் சீ பிறைற், மணித்தாரா முட்டைகளாகவும், குஞ்சுகளாகவும் எப்போதும் பெற்றுக் கொள்ளலாம். T. ரவீந்திரன், நவாலி தெற்கு, மானிப்பாய். (7980)

மர "முந்திரி விதைகள் (கஜு"), சுத்தமான இலுப்பெண்ணெய், தேன், ஒரு பெரிய திருக்கை வண்டில், பான்டெயில் புறாக்கள் விற்பனைக்குண்டு. ந. வரதராசா, ராஜ்கோபால் களஞ்சியம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (33540)

பொமனேரியன் நாய்கள் சிறிய இனம் ஆண், பெண் இரண்டு. ஒரு வயது பூர்த்தியாகியது. விற்பனைக்குண்டு. தொடர்பு: 30, சுவாட்ஸ் லேன், கண்டிக்குளி, யாழ்ப்பாணம் [ஆசீர்வாதம் அச்சகம் முன்பாக] [7993]

## மலிவு விற்பனை

3ஆம் தவணைப் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்காக ஆண்டு 3இல் இருந்து O/L வரை அனைத்து பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) 50 வீதம் கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond புத்தக நிறுவனம் 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7988)

## இறைச்சிக்கோழி விற்பனை

எல்லா வகையான இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33562)

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (33359)

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். நல்லின அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 698/15, சபாபதி வீதி, தலையாழி (வைரவர் கோயிலடி), யாழ்ப்பாணம். (33552)

## மணிக்கூடுகள்

புதிய கடிகாரங்கள் வாங்குபவர்களுக்கு மட்டும் அவர்களின் பாவித்த கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்), கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய்வீதி, ஆனைக்கோட்டை. (சி-9514)

## O/L MATHS

27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. (7977)

## மழைப் போர்வைகள்

மழைப் போர்வைகள் (Rain Coats) மழைத் தொப்பிகள், ஜேர்க்கின் என்பன விரும்பிய நிறங்களில் வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம். அளவிற்கேற்ப தைத்தும் கொடுக்கப்படும். ராம் சன்ஸ், சுதுமலை வடக்கு, மானிப்பாய். [சுதுமலை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில்] (7992)

## தேவை

சுன்னாகத்திற்கு புதிதாக ஆரம்பிக்க இருக்கும் ஓர் ஐஸ்கிறீம் கொம்பனிக்கு அனுபவம் உள்ள ஓர் பங்காளர் தேவை. பில் கிளாக் பரிமாறுவோரும் தேவை. நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். மே/பா 38, மே/பா 82, உதயன் சேவை நிலையம், சுன்னாகம். (7687)

வயோதிபத் தம்பதிகளுக்கு சமைக்கவும், வீட்டைப் பராமரிக்கவும், வீட்டோடு இருக்கத் தகுந்த பெண் உதவியாள் உடன் வரவும். சம்பளம் பேசிக் கொள்ளலாம். இல. 25, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். [33558]

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு உதவிப் பூசகர் உடன் தேவை. வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தகுதி உடையோர் விண்ணப்பிக்கவும். இல. 713, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [33567]

## றோணியோ, தட்டச்சு

மிகத் தெளிவான எழுத்துப் பிழைகளற்ற தத்ரூபமான படங்களுடன் (தமிழ், ஆங்கிலம்) Stencil கட்பண்ணி றோணியோ வேலைகளை குறித்த தவணையில் செய்து தர Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7989)

## ஜோஸ்யர்மலர்

வழமைபோல் ஜோஸ்யரின் வியாழமாறுதல், ஆறுருபாய்க்கு அற்புதமான சிறப்பு மலராக இவ்வாரம் வெளிவருகின்றது. படித்து முடிந்ததும் எமக்கும் ஒரு வரி எழுதுங்கள். இது ஓர் சோதிட அறிவுக்கருகூலம். [33555]

## ஆண்டு 3, 4, 5

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் (1995) மாதிரி வினாத்தாளும், ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலை மாதிரி அனுமதி வினாத்தாளும் 30-10-94 ஞாயிறு வெளியிடப்படும். 23-10-94இல் வெளியிடப்பட்ட ஆண்டு 3 வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [33556]

## புலமைப் பரிசில் பயிற்சி

ஆண்டு 5 புதிய புலமைப் பரிசில் பயிற்சி தமிழ், ஆங்கில கட்டுரைகள், விடைகளுடன் வெளிவந்துவிட்டது. ஆக்கியோன்: த. அம்பிகைபாகன், ஆண்டு 3, 4, 5 மாணவர்களுக்கும் புலமைப் பரிசில், பிரபல பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கும் ஏற்றது. விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [33557]

## மணமகள் தேவை

கனடாவில் நிரந்தர தொழிலும், வதிவிட உரிமையையும் கொண்ட 5' 11'' உயரமுடைய 29 வயது மணமகனுக்கு 25 வயதுக்குட்பட்ட உயரமான மணமகள் தேவை. நட்சத்திரம் அனுஷம் சந்திரராசி விருச்சிகம் தயவுடன் குறிப்பு, படம் மேலதிக விவரங்களுடன் தொடர்பு: இல. 712, மே/பா, உதயன். [33565]

## கலை, வர்த்தக கல்லூரி
## C. C. A.

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

**A/L 1994**இல் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு

ஆரம்பம்:
**30·10·1994**
சனி, ஞாயிறு வகுப்பு

| | |
|---|---|
| கணக்கியல்: | 1 - 3 |
| அளவையியல்: | 3 - 4 |
| வர்த்தகம்: | 4 - 5 |
| பொருளியல்: | 5 - 6 |

-நிர்வாகி.
(சி/9540)

## மரணச் சடங்கு செலவுக்கு அரசு பொறுப்பு!

கொழும்பு, ஒக். 30
கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட சகலரினதும் மரணச் சடங்குகளுக்கான செலவை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது.

இத்தகவலை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார். (ஓ-எ)

## சிட்னி டி சொய்சா காலமானார்

கொழும்பு, ஒக். 30
முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் சிட்னி டி சொய்சா தனது 85 ஆவது வயதில் காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

1959 இல் பொலீஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற அவர், 1960 இல் காபந்து பிரதமரான டட்லி யூ.தகநாயக்காவினால் உள் நாட்டு பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளராக நியமிக்கப்பட்டார். (ஐ-எ)

## விக்னா

கல்வி நிறுவனம்
**94** பரீட்சை எடுத்தவர்களுக்கு
**95** மீட்டல்
ஆரம்பம்:
**30·10·1994**
(Sun.)

Geo. திரு. குணராஜா
7-00 — 8-00

Tam. திரு. குழந்தை
12-00 — 1-00

Hi.C. திரு. காரை-சுந்தரம்பிள்ளை
8-00 — 9-00

Log. திரு. விக்கி
9-00 — 10-00

Eco. திரு.லோகசிங்கம்
10-00 — 11-00

(சி/9539)

ஸ்கந்தா நூற்றாண்டு விழா வரிசையில
கல்லூரி சமூகக்கல்வி மன்றத்தினரால்
நிர்மாணிக்கப்பட்ட

## உலகப்பட திரைநீக்கம்

31 - 10 - 94 திங்கள் காலை 8. 30 மணிக்கு

திரு. அ. நற்பரானந்தன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், சங்கானை
அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

அதிபர், ஆசிரியர்கள்.
சமூகக்கல்வி மன்றம்.

விளம்பர அன்பளிப்பு:
**மகராசி ரெக்ஸைரல்ஸ்**
சுன்னாகம் (33563)

## அறிவித்தல்

### வட இலங்கைச் சங்கீதசபைத் தேர்வுகள்-1995

மேற்படி தேர்வுகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் 1994-11-01 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 1995-01-16 திங்கட்கிழமை வரை, சபைப் பணிமனையில், காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். படிவம் ஒன்றின் விலை ரூபா 10/-.

1995ஆம் ஆண்டுத் தேர்வுக்காக, சபையால் அச்சிட்டு வழங்கிய படிவத்தில், அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். புகைப்படப் பிரதிகளிலும், தட்டச்சிலும் தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். 1995-01-16க்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

1995ஆம் ஆண்டுக்கான தேர்வுக் கட்டணங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தரம்-01 | — ரூபா | 50/- |
| தரம்-02 | — ரூபா | 75/- |
| தரம்-03 | — ரூபா | 100/- |
| தரம்-04 | — ரூபா | 125/- |
| தரம்-05 | — ரூபா | 200/- |
| தரம்-06 | — ரூபா | 250/- |

மேலும் விவரங்கள் தேவைப்படின், சபைப் பணிமனையுடன் தொடர்புகொள்ளவும்.

தி. பெரியதம்பி,
கல்விப்பணிப்பாளரும் (யாழ். வலயம்-01),
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

[சி-9429]

ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருடம் ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் (05 - 11 - 1994) சனிக்கிழமை பகல் 11-45 மணி முதல் 2-00 மணி வரையிலுள்ள மகர லக்கினமும் துதியை திதியும் அனுஷ நட்சத்திரமும் கூடிய சித்தயோக சுபமுகூர்த்தத்தில்,

| எமது புதல்வன்<br>திருநிறை செல்வன்<br>**செல்வேந்திரா**<br>(செல்வம்)<br>அவர்களுக்கும்<br>(B. Sc. Engineer) | | எமது புதல்வி<br>திருநிறை செல்வி<br>**நந்தினி**<br>(உமா)<br>அவர்களுக்கும் |
|---|---|---|

திருவருள் துணைகொண்டு சிங்கப்பூர், வுட்லன்ஸ் வீதி, 1140 ஆம் இல்லத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அரசகேசரி சிவன்கோயில் திருமண மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

தி. சாம்பசிவம்
இந்திராவதி தம்பதிகள்,
33, ஹொரடுடு வீதி,
உவன் றீ ஹில்,
ஆக்லாந்து,
நியூசிலாந்து.

பொ. சுரேஸ்குமார்
C/o Dr. சோ. பொன்னுசாமிப்பிள்ளை,
''தங்கேஸ்வரி வாசா''
கே. கே. எஸ். வீதி,
வல்வெட்டித்துறை.

[7990]

உ
ஸ்ரீராமஜெயம்

## ★ உபநயன அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பவஇல ஐப்பசி மீ 14ஆம் நாள் 31-10-1994 திங்கட்கிழமை காலை 9 மணி 55நிமிடம் தொடக்கம் 11மணி 38நிமிடம் வரையிலான தனு இலக்கின சுபமுகூர்த்தத்தில்.

எமது புத்திரன்
**சிரஞ்ஜீவி பரணீதர சர்மாவிற்கு**

பிரம்மோபதேச யஞ்ஞோபவீத தாரணம் செய்வதற்கு திருவருள் துணைகொண்டு நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்பசமேதராக வந்து சபையை சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்: மானிப்பாயிலுள்ள எமது இல்லம்

இங்ஙனம்
திரு. திருமதி ஈா. ஜெயச்சந்திரபைரவமூர்த்திசர்மா.
(ஜெயம்)

பக்கஸ்லேன்,
மானிப்பாய்.

''வேல் உண்டு வினை தீர்க்க''
நன்றி!

வரவேற்பாளர்கள்:
பிரம்மஸ்ரீ மு. சாரங்கபாணி ஐயரும் பாரியாரும்,
சிவஸ்ரீ [illegible] (7986)

## "A" LEVEL CENTRE

Point-Pedro First Lane,
Jaffna.

★ விசேட சிங்கள வகுப்பு ★
ஆரம்பம்: **01·11·1994**
Tue, Thu – 4·30

[சி-9544]

31ஆம் நாள் நினைவில்
## நினைந்து நெஞ்சுருகி நிற்கின்றோம்



அமரர்
**வைத்திலிங்கம் சோமசுந்தரம்**

மண்ணில் மலர்ந்த நாள்: 24 - 07 - 1928
மண்ணில் உதிர்ந்த நாள்: 30 - 09 - 1994

நினைவிற்குரிய நாள்: 30 — 10 — 1994

அன்புடைய எம் தலைவா அலறித் தவிக்கின்றோம்
என்பு(ம்) முருக நெஞ்சில் ஏங்கி இளைக்கின்றோம்
உன்பிரிவால் ஆற்றாது ஓங்கி அலறுகின்றோம்
என் செய்வோம் யாமே! இனி இறைஞ்சி அமைதி-
பெற வேண்டுவமோ!

எம்மினிய தலைவனின் ஆத்மா சாந்தியடைய வேண்டி பிரார்த்திக்கின்றோம்;

ஓம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொய்யாத் தோட்டம்,
இருபாலை.
—குடும்பத்தினர்.
(33560)

## நினைவஞ்சலி



**திருமதி அன்னம்மா மயில்வாகனம்**
(கொக்குவில்)
மறைவு: 30 — 10 — 1993

பிறப்பு: 20 — 09 — 193?



மறைவு: 17 — 10 — 1990

**அமரர் மயில்வாகனம் மகேந்திரன்**
(கொக்குவில்)

இருவரையும் அன்புடன் நினைவு கூரும்;
குடும்பத்தினர், நண்பர்கள்.

(33544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பனை வளம் பெருக்குவோம்

மழை காலம் வந்துவிட்டது. மாரிப்போக நெற்செய்கையை பக்குவமாகச் செய்து அதிக விளைச்சலைப் பெறுவதற்கு உழைக்க வேண்டிய காலம். அத்தோடு மாரியின் பயன் முடிந்து விட்டதாக நினைக்கக்கூடாது.

மேட்டு நிலத்தில் வளரக்கூடிய பயன்தரு மரங்களை நடுவதற்கு இது உகந்த காலம். மிக விசேடமாக பனம் விதைகளை இப்போது நடலாம். வெளிகொண்ட நிலப்பரப்புகளிலும், வீடுகளின் பின்பக்கங்களிலும் பனை விதைகளை நடுவு செய்யுங்கள். வீதியோரங்கள், வயல் வரம்புகளிலும் பனம் விதைகளை நட்டு நற்பயன் பெறலாம்.

பனையை வளர்ப்பதற்கு நீங்கள் தண்ணீர் ஊற்றும் தேவை இல்லை. இப்போது நடும் விதைகள் வேர்விட்டு முளைகொண்டு எழத் தொடங்கியதும் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவற்றை ஆடு, மாடு கடியாமல் காப்பதுதான். ஆகக்கூடியது எட்டு மாதங்களுக்கு இளம் பனங்கன்றுகளை பாதுகாத்துப் பராமரித்துவிட்டீர்களாயின், அதன் மேல் உங்களுக்குச் சிரமம் இல்லை. பனை ஓலை விரிந்து கருக்கு வைத்ததும் கால்நடைகளிடம் இருந்து பனங்கன்று தன்னைத் தானே தற்காத்துக் கொள்ளும்!

மரவளர்ப்பில் பனைவளர்ப்புப்போல் இலகுவானது வேறெதுவும் இல்லை. முறைத் தண்ணீர் என்று கவலைப்பட வேண்டியதில்லை; பசளை போடமுடியவில்லையே என்று அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

அந்த வகையில் அது சிறப்புக்குரியது. ஏனைய மரங்கள் போல தனக்குத் தேவையான தண்ணீர், போஷாக்கு உணவு எதற்கும் பனை, மற்றவர்களை எதிர்பார்த்திருப்பதில்லை. தானே சொந்த முயற்சியில் எல்லாவற்றையும் தேடிக்கொள்ளும். அதிக தண்ணீர் தேவைப்படுவதில்லை. உவர் நிலத்திலும் வளர்ந்தோங்கும் வல்லமை கொண்டது.

பனையை வளர்ப்பது எவ்வளவு இலகுவானதோ அதே போல அது தரும் பயன்களும் மிக அதிகமானவை. பனையின் குருத்தோலை தொடக்கம் வேர் வரை, அது தரும் பதநீர் தொடக்கம் சத்துள்ள பனம்பழம் வரை எல்லாமே அருஞ்செல்வங்கள். பனம் பொருள்களைக் கொண்டு தயாரிக்கக்கூடிய சீனி முதல் பனாட்டு வரை யாவும் சத்தான உணவுகள்.

எங்கள் மண்ணில் எங்கும் வளரக்கூடியது. மிக இலகுவாக வளர்க்கக்கூடியது. ஏகப்பட்ட பயன் தருவது. எங்கள் மண்ணின் பொருளாதாரத்துக்கு ஆதாரமாக இருக்கவல்லது. அதனால்தான் அதற்குக் கற்பகதரு என்று பெயரிட்டிருப்பார்கள்.

இத்தனை பெரும் செல்வத்தை வைத்துக்கொண்டு, அதனை தக்கவாறு பேணிப் பயன்பெறாது இருக்கும் எங்களைப் போன்ற சோம்பேறிகள் உலகில் வேறு எங்கும் வாழமாட்டார்கள்! இந்த அவமானத்தைப் போக்கும் விதத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஐந்து வருடங்களில் ஐம்பது லட்சம் பனை மரங்களைப் பயிரிடுவதற்குக் கற்பகச் சோலைத் திட்டத்தைத் தொடங்கியிருப்பது மனங்குளிர வைக்கிறது.

பனையை வளர்ப்பதோடு நின்றுவிடாமல் அதன் உச்சப் பயன்பாட்டை பெறுவதற்கான திட்டங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். பழைய தொழில் நுட்பங்களுடன் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தவேண்டும். அந்தத் தொழில் நுட்பங்களைப் பரப்பும் நூல்களை வெளியிடவேண்டும். அப்போதுதான் புதிய சந்ததியினருக்கு பனைத் தொழில்சார் அறிவை ஊட்டி பொருள் வளத்தைப் பெருக்க வழி பிறக்கும்.

தமிழ்ப்பகுதிப் பாடசாலைகள் எல்லாவற்றிலும் பனைத் தொழில் சார் பாடத்தை கட்டாய பாடமாக்கிப் போதிக்கவேண்டும். இனியும் இதுவிடயத்தில் காலம் தாமதிக்கக்கூடாது.

# காமினி கொலையை வைத்துக் கொண்டு சமாதானப் பேச்சை நிறுத்துவது தகாது

நடக்கும் என்பார் நடக்காது; நடக்காது என்பார் நடந்துவிடும்!

இது வெறும் சினிமாப் பாடல் வரி என்று எண்ணக் கூடாது. மனிதவாழ்க்கையின் சகல அம்சங்களுக்கும், அங்கங்களுக்கும் பொருந்தும் தத்துவார்த்த உண்மை. மனிதன் தனது அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் வாழ்வியல் விதி. அரசியலுக்கோ மிக விசேடமாகப் பொருந்துவது.

ஜனாதிபதி அல்லது பிரதமராக வருவதற்கு முன்னரே, எதிர்க்கட்சி தலைவராகவும் ஜனாதிபதி வேட்பாளராகவும் இருக்கும் போதே காமினி திஸாநாயக்கா பாலத்துறை (தொட்டலங்க) குண்டு வெடிப்பில் கொலை செய்யப்படுவார் என்று எவரும் எதிர்பார்த்தார்களா? அவரே நினைத்திருக்கமாட்டார்!

வாள் எடுத்தவன் வாளாலேயே மடிவான் என்பர். அதே போல வினை விதைத்தவன் வினையை அறுவடை செய்தே ஆக நேரிடும். வினை விதைத்தவனால் எப்படித் தினை அறுக்க முடியும்? அரசியல் வன்முறைகளில் வெறுமனே நம்பிக்கை கொண்டவராக மட்டுமன்றி, அவற்றைத் தூண்டி விடுவதில் காமினி ஈடுபடவில்லை என்று எவரும் சொல்ல முடியாது!

யாழ்ப்பாணம் நூல் நிலையத்தை எரிப்பதற்கு ஒத்தாசை புரிந்ததில் இருந்து 1983 கலவரத்தின் போது மலையகத் தமிழர்களைத் தாக்கிவிரட்டுவதற்கு பின்னணியில் நின்றது வரை, பல அரசியல் வன்முறைப் பதிவுகள் இவரது பெயரில் உள்ளன. ஏன், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலைக்கும் இவருக்கும் சம்பந்தம் உண்டு என்று கூட

### சமாதானப் பயணத்தின் 1வது தடைக்கம்பம் இது

கொழும்பில் ஒரு வதந்தி அப்போது நிலவியது. நெருப்பில்லாமல் புகைக்காது என்று கூறப்படுவதை புறந்தள்ளி விடமுடியாதல்லவா?

அரசியல் வன்முறைக்கு ஊக்கமளித்தவர் அதற்கே இரையாக நேர்ந்து விட்டது. 1994 ஒக்ரோபர் 23ஆம் திகதி நள்ளிரவு 12-17 மணிக்கு அவரது உயிர் பிரிய வேண்டும் என்பதுவே விதியாக இருந்திருக்கும் போது எவராலும் அதனைத் தடுத்திருக்க முடியாது! தடுக்க முயன்ற ரஷ்ய விமானியின் யோசனையைக் கேட்காமல் பாலத்துறைக்கு எப்படியும் சென்றே தீருவது என்று காமினி காட்டிய அவசரம், விதியின் தூண்டுதல் அன்றி வேறெதுவுமாக இருக்க நியாயமில்லை. அதனால் விதியின் பிடியிலிருந்து அவரால் தப்ப முடியாமற் போயிற்று என்பதே யதார்த்தம்.

### தலைவராக உயர இருந்தவர்

தென்னிலங்கை அரசியல் வானில் நல்ல எதிர்காலம் கொண்டிருந்த காமினி இந்த வேளையில், அதுவும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப் பீடத்துக்கு உயர இருந்த பதினேழு நாட்களுக்கு முன்னர் கொலையுண்டது துரதிர்ஷ்டமானது தான்.

நவம்பர் ஒன்பதாம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடந்து பத்தாம் திகதி முடிவுகள் வெளிவந்ததும், ஜனாதிபதி பதவியை மட்டுமன்றி ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவியையும் துறக்கப் போவதாக விஜேதுங்கா அறிவித்திருந்தார்.

காமினியே கட்சியின் அடுத்த தலைவராக வர வேண்டும் என்பது டி.பி. யாரின் அசையாத ஆசை. சிறிசேன கூரே போன்றவர்களை எல்லாம் பகைத்தவாறு கட்சியை விட்டு வெளியேற்றப்பட்ட காமினியை கட்சிக்குள் கொண்டு வந்து விஜேதுங்கா மீண்டும் சேர்த்தது அந்த நோக்கத்துடன் தான்.

ஆகையால் காமினியின் மரணம் எல்லோரையும் விட விஜேதுங்காவுக்குத் தான் பெரிய இழப்பாகும். அவரது அரசியல் வாழ்க்கையின் கடைசி ஆசை நிறைவேறாமல் போயிற்று. அரசியல் தலைமைத்துவதுக்கு வந்த பதினைந்து மாதங்களில் அவர் ஆடியஆட்டம் என்ன, குறைவா? அவர் செய்த அரசியல் தில்லுமுல்லுகள், கபட வேலைகள், குழிபறிப்புகளுக்கு தனித்தனியான நீண்ட பட்டியல்கள் உண்டு.

காமினியின் விதியின் துரதிர்ஷ்டமும், விஜேதுங்காவின் ஆசை நிறைவேறாமையும் பாதகமான பக்கத்துக்கு உரியவையாயினும், அவரின் மரணம் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளுக்கு ஒரு வகையில் அதிர்ஷ்டத்துக்கு வழி வகுத்ததாகவே நினைக்கத் தோன்றுகிறது. அதாவது...

காமினி உயிரோடு இருந்த போது, ஜனாதிபதித் தேர்லில் சந்திரிகாவுக்கு அவர் நிகரான ஜாரியாக நின்று மோதுவார் என்று கணிக்கப்பட்டது உண்மை தான். ஆனால் அவர் ஜனாதிபதியாக வெல்லக் கூடியவாய்ப்பு பெரிதாக இருக்கவில்லை. காமினி கூட, ("நான் தான் வெல்வேன்" என்று பேச்சுக்குக் கூறிவந்தாலும்,) சந்திரிகாவின் தெரிவு நிச்சயமானது என்பதைத் தனக்குள்ளே உணர்ந்திருப்பார்.

### தொந்தரவு அரசியல்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தனது செல்வாக்கை நிலைப்படுத்திக்

அரசியல்

கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பதவியை கைப்பற்றிய பின்னர் எதிர்க் கட்சியில் இருந்தவாறே தொந்தரவு கொடுக்கும் அரசியலை நடத்தி பொ.ஐ. முன்னணி அரசையும், சந்திரிகாவையும் வீழ்த்தி நாட்டின் தலைமைத்துவத்தைப் பிடிப்பது தான் அவரது நோக்கமாக இருந்தது. தனது அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக அரசியல் சதி வேலைகளில் ஈடுபடக்கூடிய தனித்திறமை கூட அவரிடம் இருந்தது. அத்தகைய ஒரு கட்டத்தில், சந்திரிகாவின் உயிருக்கு உலைவைக்கக் கூடத் துணிந்திருக்கக் கூடியவர் காமினி!

## ஐ. தே. கவை வெளிநாடுகள் படித்தளவுக்கு சந்திரிகா அரசு புரிந்து கொள்ளாதது ஏன்?

எனவே காமினியின் மரணத்தினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இழப்பு, நஷ்டம் என்று ஒரு புறம் இருந்தாலும், அதனை கட்சிக்கு அரசியல் லாபமும், செல்வாக்கும் தேடும் ஓர் கருவியாக கட்சிக்காரர்கள் மாற்றிக் கொண்டு விட்டார்கள் என்பதே உண்மை! சாவடைந்தவர் போய்விட்டார்; இனி என்ன செய்வது, அவரை வைத்துக் கட்சியை வளர்ப்போம்; ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்கு முயற்சிப்போம் என்று முனைந்துவிட்டார்கள். அவ்வளவுதான்.

கட்சியால் வளர்ந்தவர் காமினி. எனவே காமினியால் கட்சி வளரட்டுமே என்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும்.

ஆறு ஏழு நாள்களாக காமினியின் சடலத்தை வைத்து மக்களின் சோக உணர்வுகளை அனுதாப அலைகளாக்கி அவற்றை வாக்குகளாக வடிவமைக்கும் சாதுரியம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கைவந்த கலை. ஏன் சிங்கள அரசியல்வாதிகளின் பாரம்பரியமும் அதுவே!

காமினியின் இறுதிச் சடங்கு நேற்று நடைபெற்ற போது, கொழும்பில் பெரும் குழப்பமும், கலவரமும் ஏற்பட்டு, எப்போதும் இவற்றின் கடைசி இலக்குகளாக உள்ள தமிழர்கள் தாக்கப்படலாம் என்ற பதற்றநிலை தோன்றியதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் ஆதாயம் பெறும் உபாயமே காரணம்.

### புலிகள் மீது குற்றச்சாட்டு

அவர்களது நோக்கம் அது மட்டுமல்ல. வடக்கு-கிழக்குப் போரை நிறுத்தவும், தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கி நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதற்கும் சந்திரிகா மேற்கொண்ட முயற்சிகளை குண்டு வெடிப்புச் சம்பவத்தைப் பயன்படுத்தித் தடுப்பதும் அவர்களின் முக்கிய நோக்கமாகும். குண்டு வெடிப்புச் சம்பவத்தைக் காட்டி அரசின் சமாதான முயற்சியை எவ்வளவுக்குப் பின்தள்ள முடியுமோ அந்தளவுக்கு பின்தள்ளச் செய்து, அதில் அரசியல் ஆதாயம் தேட, முன்னாள் சபாநாயகர் முகம்மது தொடக்கம் முந்த நாள் வந்த விமல் விக்கிரம சூரியா வரை இயன்றவரை முயற்சிக்கிறார்கள்.

இது விடயத்திம் பேரின வாதிகள், போரால் லட்சாதிபதிகளாவோர் ஆகிய தரப்பினரும் ஐ. தே. கவுடன் கைகோத்து நிற்பர் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

"செல்லும் செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார்" என்பது போல, இலங்கையின் எந்த மூலையில் என்ன அசம்பாவிதம் நடந்தாலும், அது விடுதலைப்புலிகளின் வேலை என்று எடுத்த எடுப்பிலேயே தீர்மானம் எடுத்து விடுவது ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளின் இரத்தத்தில் ஊறி விட்டது. அவர்களைப் போலவே அவர்களின் அடிவருடிகளாகப் பழகிவிட்ட படைத்துறையும் சரி, புலனாய்வுத் துறையும் சரி, பொலீஸும் சரி, எந்த அசம்பாவித்தையும் புலிகள் தலை மீது போட்டுவிடுவது உண்டு.

இதில் வேடிக்கை என்னவெனில், சந்தேகத்துக்கு உரியவர் யார் என்பதனை கண்டறியும் நோக்குடன் எந்த விசாரணையும் நடத்தப்படுவதில்லை. விடுதலைப் புலிகள் தான் குறிப்பிட்ட அசம்பாவிதத்தின் சூத்திரதாரிகள் என்ற முடிவோடு தான் விசாரணைகள், புலனாய்வுகள் எல்லாமே ஆரம்பிக்கப்படுகின்றன!

### சமாதான முயற்சியை முறியடிக்க...

இந்த மரபுப்படியே, பாலத்துறைக் குண்டுவெடிப்பையும் விடுதலைப் புலிகளே செய்தார்கள் என்று ஐக்கிய தேசியக்கட்சியினர் எவ்வித தாமதமும் இன்றிக் குற்றஞ்சாட்டினர். அது வழமையான வாய்ப்பாட்டு என்று கருதி விடக்கூடாது. தாங்கள் ஈடுபடத் தவறிய ஒரு நல்ல முயற்சியில், சந்திரிகா அரசு, விடுதலைப்புலிகளுடன் பேசும் சமாதான முயற்சியில் இறங்கியிருக்கும் போது ஐ. தே. கட்சி வாய்க்கு வந்தபடி இவ்வாறு குற்றஞ்சாட்டுவது மிகவும் பாரதூரமான செயலாகும். சமாதான முயற்சியை முறியடிப்பதற்கென்றே திட்டமிடப்பட்ட சதியாகும்.

இதற்கும் மேலதிகமாக, பிரதமர் சந்திரிகாவே விடுதலைப் புலிகளைக் கொண்டு காமினியை கொல்வித்தார் என்ற குற்றச்சாட்டு, ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு அனுதாப வாக்குத் திரட்டுவதற்காக மட்டும் என்று நினைத்து விடலாகாது. சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையுமே குண்டு வெடிப்புடன் சமபந்தப்

### தாண்டிப் பாயும் திறமை சந்திரிகாவிடம் உண்டா?

படுத்தி சமாதானப் பேச்சுக்களை முறியடித்து தடுப்பதே ஐ.தே. கவினரின் முழு நோக்கமும் ஆகும்;

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் என்று தமது அரசு தடுத்து வைத்திருந்தவர்களை, சந்திரிகா அரசு விடுதலை செய்து, அவர்களைக் கொண்டே காமினியையும் கொல்வித்திருக்கிறது என்று தமது குற்றச்சாட்டுக்கு ஓர் பொய்யான ஆதாரத்தையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் முன்வைத்திருக்கிறார்கள்!

### வெளிஉலகத்தின் செய்திகள்

ஐக்கிய தேசியக் கட்சியினரின் இந்த நடத்தையும், அவர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளையும் நுணுக்கமாக ஆராய்ந்தால் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதனை அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்; சமாதான முயற்சிகளை என்ன சூழ்ச்சியைச் செய்தேனும் குழப்பி விடுவார்கள் என்பது புலனாகிறது.

இதனாலேயே அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் காமினியின் கொலையைக் கண்டித்ததோடு நிற்காமல், சமாதானப் பேச்சுக்களை இயன்றளவு விரைவில் மீண்டும் ஆரம்பிக்குமாறு சந்திரிகா அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றன. ஐ.நா. செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலியும் சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதனையே வலியுறுத்தி உள்ளார்.

தலைவர் ஒருவர் மரணம் அடைந்தால் கொலையுண்டால்— கவலை தெரிவித்து, இரங்கல் தெரிவித்து அல்லது கண்டித்துச் செய்தி அனுப்புவதுதான் வழக்கம், ஆனால் ஐ. நா. முதல் கனடா வரை கொலையைக் காரணம் காட்டி சமாதானப் பேச்சை நிறுத்திவிடாதீர்கள்; இந்த வன்முறையைப் பயன்படுத்தி மேலும் வன்முறைகளை கட்டவிழ்த்துவிட இடமளியாதீர்கள் என்று தெரிவித்திருக்கின்றன.

சரியாகச் சொல்வதானால் பதினேழு வருடங்களாக ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியை ஐ. நாவும், ஏனைய உலக நாடுகளும் நன்றாகப் படித்துவிட்டன என்பதாகும். காமினியின் கொலையைக் கருவியாக வைத்து, ஐ. தே. கட்சியினர் பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிப்பார்கள் என்பதை அந்த நாடுகளும் ஊகித்திருக்கின்றன.

### சமாதானம் அலர்ஜி

கனடா போன்ற நாடுகளுக்கு ஐ.தே. கவைப் பற்றி அதிக அனுபவம் உண்டு. முன்னர் பல தடவைகள் சமாதானப் பேச்சு நடத்துமாறு அவை கூறிய யோசனைகளை ஏறெடுத்தும் பார்க்காமல், முகத்தில் அறைந்தது போல, தூக்கி வீசியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர்! தமிழர்களுக்கு உரிமை, சமாதானம், அரசியல் தீர்வு என்ற வார்த்தைகள் ஐ.தே. கவினருக்கு 'அலர்ஜி' நிலையைத்தருவன என்பதுவும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது!

தாம் தலைகீழாக நின்றேனும் புதிய அரசின் சமாதான முயற்சிக்கு ஐ. தே. கவினர் வேட்டு வைத்து விடுவர் என்பதனை ஐ.நா. உட்பட வெளிநாடுகள் உணர்ந்திருக்கின்றன. எனவே காமினியின் கொலையின் மத்தியிலும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கக் கூடிய துணிவும், மன ஓர்மமும் சந்திரிகாவுக்கும் அவரது சகபாடிகளுக்கும் தேவை.

சமாதானப் பேச்சு இடைநிறுத்தப்பட்டதாக சந்திரிகா அறிவித்து விட்டார். குண்டு வெடிப்பு குறித்த விசாரணை முடிந்த பின்னரே அது மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் கோடி காட்டியிருக்கிறார். காமினி கொலையில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்தால் பேச்சுவார்த்தை குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் சந்திரிகா அறிவித்தார்.

### புரிந்து கொள்ளவில்லை

ஐ தே.கட்சியை ஐ.நாவும், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளும் புரிந்து கொண்டது போல சந்திரிகா புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. அவ்வாறு அவர் புரிந்து கொண்டிருந்தால் ஜனாதிபதி தேர்தலுக்காக இவ்வாறு பேசுகிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா?

"நாட்டில் நடக்கும் 11 வருட கால உள்நாட்டுப் போருக்கு விடுதலைப் புலிகள் இன்றித்தீர்வு காண முடியும் என்று நினைப்பது முட்டாள் தனம்" என்று அவர் தமது பத்திரிகைச் செவ்வியில் "வைத்துப் பேசியிருப்பது" அதனையே கருத வைக்கிறது.

பிரதமர் அளித்த செவ்வியின் போது அருகிலிருந்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்

### உதயகாந்தன்

காமர் —

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் உலகின் ஏனைய பாகங்களில் வன்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. வன்செயலைப் பாரதூரமாக கருதினால் எவராலுமே பேச்சு நடத்த முடியாது— என்று கூறியிருப்பதும் அரசு தனது சமாதானப் பேச்சு முயற்சியைக் கைவிடத் தயாரில்லை என்பதை உணர்த்துகிறது.

அந்த உணர்வுடன் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு, சமாதானப் பேச்சுக்கள் தொடர வேண்டும். தொடரும் என எதிர்பார்ப்போமாக. சமாதான முளையை ஐ. தே. க. கிள்ளி எறிந்து விடாமல், தடுத்துப் பாதுகாப்பதிலேயே சந்திரிகாவின் உண்மையான கெட்டித்தனம் தெரியவரும்.

சமாதான முயற்சிப்பாதையில் முதலாவது தடைக் கம்பம் இது. இதனைத் தாண்டும் திறமை சந்திரிகாவுக்கு உண்டா? ஜனாதிபதி தேர்தல் வரை பொறுத்திருந்து தான் பார்ப்போமே... ★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## வாணவேடிக்கை பூவெடிகளுக்கு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருந்த கதிரைகளின் மீது விழுந்து கிடந்தனர்.

ஒஸி அபயகுணசேகர "தண்ணீர், தண்ணீர்" எனக் கத்திக் கொண்டிருந்தார். இடையிலே அருகே வந்து தூக்கப்போன ஒருவரிடம் "ஏன் இப்படிக் கொலை செய்தார்கள்" என்று கேட்டார்.

வீரசிங்க மல்லிமாராய்ச்சி அதே இடத்திலேயே இறந்து போயிருந்தார். காமினி முனகியபடி இருந்தார்.

அவரைத் தூக்கி அருகே நின்ற அவரது காரிலேயே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். அங்கே அவரது நெஞ்சுப் பகுதிக்கு "மசாஜ்" செய்து அவரை பிழைக்க வைக்க டாக்டர்கள் முயற்சித்தனர். ஆனால் எந்த முயற்சியும் பலனளிக்காத நிலையில் சொற்ப நேரத்தில் காமினியின் உயிர் பிரிந்தது.

### மனைவியும் மகனும்

அதே கணம் காமினியின் மனைவியும், மகனும் உள்ளே நுழைந்தனர்.

காமினிக்கு காதிலேயும், வயிற்றிலேயும் பெரிய காயங்கள் ஏற்பட்டிருந்தன. அதிகாலை 4-20மணிக்கு- காமினியினதும் ஐ. தே. க. செயலாளர் காமினி விஜேசேகரவினதும் சடலங்கள் உறவினரிடம் கையளிக்கப்பட்டன.

இறந்தவர் ஒருவரின் மணிக்கூடு நின்றிருந்த நிலையை வைத்து குண்டு வெடித்தது. சரியாக 12-17 மணிக்கு என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் ஐ. தே. க. தலைவர்களுடன் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 6 பொலீஸார் உட்பட 52 பேர் கொல்லப்பட்டனர். பலர் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இரகசிய பொலீஸார், இராணுவத்தின் உளவுப் பிரிவினர், குண்டு நிபுணர்கள் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் வெடி குண்டு நிபுணர்கள் மேடையைச் பரிசோதித்தார்கள். ஆகவே கூட்டம் ஆரம்பித்த பின்னரே வெடி குண்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஒரு பெண் மனித கொலையாளிஇந்த குண்டு வெடிப்பை நடத்தியிருக்கிறார் என்று பொலீஸ் வெள்ளி (28-10-49) இரவு அறிவித்தது. ஆயினும் அதற்கு முன்னர் அந்த பெண் கூட்டத்தைப் பார்க்க வந்த ஒருவராக இருக்கலாம் என்றும் சொல்லப்பட்டது. ஆயினும் அவரை ஆதாரமாக[illegible] வைத்து விசாரணைகள் தொடர்கின்றன.

குண்டு வெடித்த இடத்தில் குண்டை கட்டிவந்த பட்டி ஒன்றும் உடை ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுஅண்மையில் மோதரயில் (முகத்துவாரத்தில்) கடற்கரையில் குண்டுகளுடன் காணப்பட்ட உடையை ஒத்ததாக காணப்படுகிறதாம்.

இந்த குண்டு வெடிப்புக்கு நால்ரை கிலோ எடையுள்ள RDX என்றவெடிமருந்துபாவிக்கப்பட்டுள்ளதாகவும்மேடையிலிருந்து 8 அல்லது 9 அடி தூரத்தில் இது வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாம்.

### கமரா மீட்பு

இதே வேளை புகைப்பட கமராஒன்று ஆதாரங்களுடன் பிடிபட்டுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தக் குண்டு வெடிப்பிற்கு பிளாஸ்ரிக் வெடி குண்டுபயன்படுத்தப்பட்டிருக்கலாமோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. ஏனெனில் மேடையின் மேற் புறத்தில் உருக்குத் துண்டுகள் தாக்கிய பெரிய ஓட்டை ஒன்று காணப்படு[illegible] மேசைகளிலும் ஓட்டைகள் [illegible]. எனவே இவை பிளாஸ்ரிக் குண்டின் உருக்குக் குண்டுகளாக இருக்கலாம் என்றும் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

எவை, எவ்வாறாயினும் இதுவரை விசாரணைகளை தொடர்வதற்கு உறுதியான எந்த ஆதாரங்களும்கிடைக்கவில்லை என்கிறார் குற்றத் தடுப்பு பொலீஸ்மா அதிபர் இக்னேஷியஸ் கனகரத்தினம் இதேவேளை கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் பட்டியலில் தமிழர்களும் அடங்கியுள்ளனர். அவர்கள் பற்றியும் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகிறதாம்.

மொத்தத்தில் காமினி கொல்லப்பட்டு விட்டாரே என்பதை விட அவரது கொலையினால் தங்களுக்கு எவ்வாறு ஆதாயம்தேடலாம் என்பதிலேயேஅரசியல் வாதிகள் முனைப்பாக இருக்கிறார்கள்.

எப்படியோ, தெற்கு அரசியலிற்கு மேலும் ஒருவிதவை அறிமுகப்படுத்தப்பட்டு விட்டார்.

கொலையாளி யார் என்பதை இராணுவத்தினரும் பொலீஸாரும் சளைக்காமல் தேடுகிறார்கள்! ஏதாவது துப்புக் கிடைக்குமா? இது விடையில்லா புதிர், முடியாத தொடர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த

# ஐ. தே. க. தலைவர்களுக்கு கூரேநேரில்சென்றுஅஞ்சலி

கொழும்பு, ஒக். 30
கடந்த ஞாயிறு கிராண்ட்பாஸ் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஐ. தே. க. தலைவர்களின் இல்லங்களுக்குச் சென்று தமது அனுதாபத்தை முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்தார்.

"எவ்வித பாதுகாப்பும் இன்றி எனது சாரதியுடன் மட்டுமே காரில் உயிரிழந்த தலைவர்களின் இல்லங்களுக்கு நான் சென்றேன்"—என்று திரு. கூரே லங்காதீப பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

காமினி திஸநாயக்கா கொலையுண்டதன் பின்னர் தாம் எச்சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்புக் கோரவில்லை என்றும்—

அரசு தாமாகமுன்வந்து தமக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-எ-6)


மலரும் தீபாவளி திருநாளை முன்னிட்டு

ஆரம்ப திகதி 30 - 10 - 1994　　முடிவு திகதி 01 - 11 - 1994

திருநெல்வேலியில் மலிவு விற்பனை

# புதியதாரகை

புடைவையகம்

சகல விதமான தைத்த ஆடைகளும் புடைவை தினுசுகளும்
மலிவு விலையிலும் 10% கழிவு விலையிலும்
பெற்றுக்கொள்ள இன்றே விரைந்திடுங்கள்

புதிய தாரகை புடைவையகம்
திருநெல்வேலிச் சந்தி,　　திருநெல்வேலி.
(33569)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி செல்வி. ச. தயாமதி அவர்களின் அன்புத் தந்தை

**சண்முகநாதன் (நெல்லியடி)**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து கவலையுறுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

2 ஆம் வருட பௌதிக விஞ்ஞான மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.

குறிப்பு:- இன்று காலை 8.30 மணிக்கு 2 ஆம் வருட பௌதிக விஞ்ஞான சக மாணவர்களைப் பல்கலைக் கழகப் பொது அறையில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (33572)

## மரண அறித்விதல்கள்

### திருமதி அன்னம் சிற்றம்பலம்

சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலாயுதர் சிற்றம்பலத்தின் அன்பு மனைவி திருமதி அன்னம் சிற்றம்பலம் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சதாசிவம், கருணைநாயகி (கருணா), புவனேஸ்வரி (இந்திரா), காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் (சபா), ஜோதீஸ்வரி (சந்திரா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ருக்மணி (தேவி), சிவசுப்பிரமணியம், குமாரசுவாமி, சிதம்பரநாதன், ஆகியோரின் அருமை மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30-10-1994) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த சிதம்பரநாதன் (மருமகன்)

375/5, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.　　(33568)

### அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை [ஐயாத்துரை]

கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை காலமான அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை [ஐயாத்துரை] யின் மரணச்சடங்குகள் இன்று [30-10-94] பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

அன்னார் திரேசம்மா [பிள்ளைமுத்து] வின் அன்புக் கணவரும், பிரான்சிஸ் [புகையிரத நிலையம் திருகோணமலை], மரியதாஸ் [அரசமரக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்], ருசைதாசன் [பிரான்ஸ்], கிறிஸ்தோப்பர் [சென். ஜோசப் வித்தியாலயம்], லோரன்ஸ் [ஜேர்மனி], அகஸ்ரின் [பரியோவான் கல்லூரி], இம்மானுவேல் [ஜேர்மனி], அன்ரனிற்றா ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது 117/2 பாங்ஷால் வீதி இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு 3-30 மணிக்கு யாழ். பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியை அடுத்து யாழ். கொஞ்சேஞ்மொதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மரியதாஸ் [மகன்]

[டு/9563]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30-10-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### பல இன, கலாசார மக்களின் அமைதி வாழ்க்கை:

# சமஷ்டி அரசமைப்பின் பின்னரே சுவிஸில் சமாதானம் ஏற்பட்டது

## பிரியாவிடை உரையில் சுவிஸ் தூதர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 30
சுவிஸ் நாட்டில் 1848இல் சமஷ்டி அரசமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னரே அங்கு சமாதானம் ஏற்பட்டது.

கொழும்பில் சுவிஸ் தூதராகப் பணியாற்றிய பின்னர் பதவி விலகிச் செல்லும் திரு. அந்த்ரே வொன் கிராபன்ரீட் தமது பிரியாவிடைப் பேச்சில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அளித்த பிரியாவிடை விருந்தில் சுவிஸ் தூதர் மேலும் சொன்னதாவது:

இலங்கைக்கு ஊக்கம் கொடுக்கும் ஒரு நாடாக சுவிட்சர்லந்து இருக்க முடியும். பல கலாசாரங்கள் உள்ள சமூகம் சமாதானமாக வாழமுடியும் என்பதை சுவிஸ் நாடு எடுத்துக்காட்டியுள்ளது சமாதானம் நிலவினால் பல்லின சமூகம் நாட்டிற்குப் பெரும் சொத்தாக இருக்கும்.

சுவிட்சர்லாந்தில் பல நூற்றாண்டுகளாக மோதல்கள் நிலவின. 1848இல் சமஷ்டி அரசமைப்பு அங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னரே சமாதானம் ஏற்பட்டது இன்று சுவிஸில் தங்கு தடையற்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி காணப்படுகின்றது.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் வெற்றியடைய வாழ்த்தி நாங்கள் விருந்துண்போம்

இவ்வாறு சுவிஸ் தூதர் மேலும் தெரிவித்தார். (ஐ-எ)

### கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு:

# தகவல் தருவோருக்கு ரூ.10 லட்சம் சன்மானம்

கொழும்பு, ஒக். 30
கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரி எனச் சந்தேகிக்கப்படும் பெண்ணை சரியாக அடையாளம் காண்பதற்கு உதவும் எந்த ஒரு தகவலையும் கொடுப்பவர்களுக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்;

தகவல் கொடுக்க வேண்டிய தொலைபேசி இலக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க உதவுவோருக்கு 5 லட்சம் ரூபா வழங்கப்படும் என்றும் பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## மாவட்ட விளையாட்டு விழா இறுதி நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும யாழ். மாவட்ட விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளது. காலை தடகளப் போட்டிகளின் இறுதி நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பிற்பகலில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதும்.

இரவு நிகழ்ச்சியாக மல்யுத்த இறுதிப் போட்டி ஏ. ஓ. எம். ஏ. கராத்தே கழகத்தினரின் கராத்தே கண்காட்சி, காட்சிப் போட்டி ஆகியன இடம்பெறும்.

பிரதம விருந்தினராக தமிழீழ அரசியல் துறை துணை பொறுப்பாளர் திரு. கே. கரிகாலனும் சிறப்பு விருந்தினர்களாகத் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண.பிதா பிரான்ஸிஸ் ஜோசப், வலிகாமம் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி பைரவி, யாழ். வணிகர் கழகத் தலைவர் திரு. பே. சிற்சபேசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறும். (உ-ஒ)

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 30
திரு. செல்லையா பெற்றாஸ் மயில் எழுதிய "ஆனையை அடக்கிய அரியாத்தை" என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் விழாவுக்குத் தலைமை வகிப்பார். (ஐ

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 30
அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இன்று ஞாயிறு காலை9மணிக்குநடைபெறும்.

பிரதம விருந்தினராக யூனியன் கல்லூரி அதிபர் திரு. பொ. கமலநாதன் கலந்து கொள்வார். (ஓ)

★ ★ ★

வசாவிளான் குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கலந்து கொள்வார். (ஓ)

### பல்லாயிரக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் அங்கு உரையாற்றினர்.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை அங்கு உரையாற்றிய அனைத்து மதத் தலைவர்களும் வலியுறுத்தினர்.

பின்னர் காமினி திஸாநாயக்காவின் சிதைக்கு அவரது புதல்வர் நவீன் திஸாநாயக்கா தீ மூட்டினார்.

இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட வெளிநாட்டுத் தூதர்கள், அரசியல்வாதிகளுக்கு சுதந்திர சதுக்கத்தில் விசேட ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. சுதந்திர சதுக்கம் பாதுகாப்பு பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட்டு குண்டுகள் மற்றும் வெடி பொருள்களை சோதிக்கும் உபகரணங்களுடன் [illegible] அமர்த்தப்பட்டிருந்தனர்.

### பூச்சி மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில்புன்னாலைக் கட்டுவன் மத்தாளோடை அரசினர் மருந்தகத்தில் இன்று ஞாயிறு முற்பகல் 9 மணி முதல் பூச்சி மருந்து இலவசமாக வழங்கப்படும். (ஐ)

### கோமாரி மீண்டும் மாவுடன் வருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 30
சென்ற வியாழக்கிழமை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட 'கோமாரி' கப்பல் மீண்டும் எதிர்வரும் வியாழக்கிழமை 3 ஆயிரத்து 100 மெற்றிக் தொன் மாவுடன் பருத்தித்துறையை வந்தடையும்.

தற்போது யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டை முற்றாக நீக்கும் பொருட்டு இக்கப்பலில் மீண்டும் மா எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினூடாக பங்கீட்டு அட்டைக்கு 3 கிலோ மா விநியோகிக்கப்படுகிறது.

அடுத்த கட்டமாகவும் இவ்வாறு மா விநியோகிக்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

### காமினியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

தற்போதைய சூழ்நிலையில் அரசின் பிரதிநிதிகள் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வது வன்செயல்கள் ஏற்பட இடமளிக்கும் என பாதுகாப்புப் பிரிவினர் எச்சரித்ததைத் தொடர்ந்தே தாம் தமது அஞ்சலி உரையை எழுதி கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் —

தமது அனுதாபச் செய்தியை கூட்டத்தில் வாசிப்பதாக அவர்கள் தமக்கு உறுதியளித்திருந்தனர் என்றும் அமைச்சர் தொடங்கொட [illegible] தெரிவித்தார். [illegible] அனுதாபச் செய்தி அஞ்சலிக் கூட்டத்தில் வாசிக்கப்படவில்லை.

### விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 30
தமிழீழ நிர்வாக சேவையினர் நாளை திங்கள் நடத்தவுள்ள விசேட கலந்துரையாடல்கள் வருமாறு:-

யாழ். மாநகர சபை ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில்

பருத்தித்துறைக் கோட்டம் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை பகல் 1.00 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த் பெண்கள் உயர் கல்லூரியிலும் வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியிலும்.

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை பகல் 1.00 மணிக்கு நெல்லியடி ம.வியில்

பருத்தித்துறை நகரசபை, பிரதேச சபை ஊழியர்கள், வல்வெட்டித்துறை நகரசபை ஊழியர்கள், வடமராட்சி மத்திய மருந்தகம், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை பகல் 2.00 மணிக்கு. (ஓ)

### மற்றும் ஒரு எம்.பி படுகாயம்

கொழும்பு, ஒக். 29
கிராண்ட்பாஸ் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்களில் கொழும்பு ஐ. தே. க.எம்.பியான பேராசிரியர் கருணசேன கொடித்துவக்குவும் ஒருவர் என்று அறிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் கூட்டமேடையில் காமினி திஸநாயக்காவுக்கு அருகில் இவரும் அமர்ந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேராசிரியர் கொடித்துவக்கு அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்பு களனி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-எ)

### குண்டுத் தாக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யம் வெடிகள், வாணங்களைக் கொளுத்தியவர்களுக்கும் சம்பந்தம் உண்டு என தங்களுக்கு அநாமதேய தொலைபேசி தகவல் ஒன்று கிடைத்திருப்பதாயும் —

குண்டு வெடிக்கும் சத்தம் வெளியே கேட்காமலிருக்க இந்த வாணங்களும், வெடிகளும் வெடிக்கவைக்கப்பட்டதாக அந்தத் தகவல் மூலம் தங்களுக்குத் தெரியவந்ததாயும் பொலீசார் தெரிவித்தனர்.

இதேவேளை கொட்டாஞ்சேனை லொட்ஜ் ஒன்றில் மாதக்கணக்கில் தங்கியிருந்த 10 பேர் குண்டுவெடித்த அன்று பகலில் பரபரப்புடன் வந்து, அறையைக் காலி செய்து கொண்டு சென்றுள்ளதாகவும், யாழ்ப்பாணவாசிகள் என்கருதப்படும் இவர்களைக் கைது செய்வதற்காக அவர்களது புகைப்படங்கள் பொலிஸ் முன்னணி இராணுவ சோதனை முகாம்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்றும்— பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### ரூபவாஹினி படப்பிடிப்பாளர் வரவில்லை

கொழும்பு, ஒக். 30
நேற்று நடைபெற்ற காமினி திஸாநாயக்காவின் இறுதி ஊர்வலம் மற்றும் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகள் ரூபவாஹினி, இலங்கை வானொலி என்பவற்றில் நேரடியாக ஒலி, ஒளி பரப்பப்படவில்லை.

சுதந்திரச் சதுக்கத்தில் நடந்த இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ. தே. க பிரமுகர்கள் பலரும் அரசின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்தனர். அவ்வாறு கண்டித்தவர்களில் அனுரா பண்டாரநாயக்காவும் ஒருவராவார்.

இறுதி அஞ்சலிக் கூட்டம் ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையில் நடைபெற்றது.

## சமாதான முயற்சிகளுக்கு படையினரின் ஆதரவு உண்டு

### பிரதமர் சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஒக். 30
சமாதான முயற்சிகளில் ஆயுதப்படையினர் பூரண ஒத்துழைப்பை நல்குகின்றனர்.

பிரதமர் சந்திரிகா நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பொ. ஐ. மு அரசில் ஆயுதப் படையினருக்கு நம்பிக்கை உண்டு. ஆயுத படையினருக்கு மேலும் பல வசதிகளை அரசு செய்து கொடுக்கும் — இவ்வாறு பிரதமர் மேலும் தெரிவித்தார்.

### சரியான விசாரணை இன்றி

# புலிகள் மீது குற்றம் சுமத்தப்படக்கூடாது

### வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

கொழும்பு, ஒக். 30
காமினி படுகொலை தொடர்பாக சரியான விசாரணை இன்றி விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்படக்கூடாது.

பொ.ஐ.முன்னணி எம்.பி. வாசுதேவ நாணயக்கார முன்கண்டவாறு பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

காமினி திஸாநாயக்கா படுகொலை போன்ற வன்முறைகள் 17 ஆண்டு காலம் ஐ. தே. க. நடத்திய வன்முறை ஆட்சியின் விளைவுகள் என்றும் அவர் கூறினார்.

# ஐ. தே. கவில் உட்பூசல் தீவிரமடைகிறது!

கொழும்பு, ஒக். 30
ஐக்கியதேசியக் கட்சியில் உட்பூசல் தீவிரமாகி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

முன்னாள் பிரதமரான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட மிரட்டல் நடவடிக்கையை அடுத்து, கட்சிக்குள் உட்பூசல் புதிய பரிமாணம் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### அடுத்த ஆண்டு முதல்

## இடமாற்றச் சபை மூலமே ஆசிரிய இடமாற்றங்கள்

### கல்வி அமைச்சர் உறுதிமொழி

யாழ்ப்பாணம், ஒக். 30
ஆசிரிய தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய இடமாற்றச் சபை ஒன்றின் மூலமே அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன ஏற்றுக் கொண்டுள்ளார்.

அடுத்த ஆண்டு முதல் அதிபர், ஆசிரியர் இடமாற்றங்கள் மேற்கூறிய நடைமுறையின் கீழேயே செய்யப்பட வேண்டும் என்று ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் அண்மையில் அமைச்சரைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

அவர்களின் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சர் அதுதொடர்பான அறிவுறுத்தல்களைத் தாம் விரைவில் சம்பந்தப்பட்ட மாகாண, மாவட்ட, கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார்.

கல்வி அமைச்சருடனான சந்திப்பில் ஜாதிக குரு சங்கத்தின் தலைவர் திரு. தகநாயக்கா செயலாளர் திரு. போலியர் குணவர்த்தன, இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் பத்திரிகைச் செயலாளர் திரு. எஸ். கே. சதாசிவம் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ)

### தாக்குதலுக்கு சஜித் காரணமாம்

கொழும்பு, ஒக். 30
கடந்த செவ்வாய்க்கிழமை ஐ. தே. கவின் தலைமையகமான ஸ்ரீ கோத்தா வுக்கு வெளியே வைத்து ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்டதற்கு பிரேமதாஸாவின் மகன் சஜீத்தே காரணம் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரூபவாஹினி படப்பிடிப்பாளர்கள் தாக்கப்பட்ட சமயம் சஜித்துடன் அவரது தாயாரான ஹேமாவும் கூட இருந்தார்கள் என்று கூறப்படுகிறது. (இ)

### சிறிமா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காமினியின் கொலையை வைத்து மீண்டும் உயிர்பெற ஐ.தே.க. முயற்சிக்கிறது.

நாட்டைச் சூறையாடியவர் மீண்டும் ஆட்சிக்கு வர இக்கொலையைப் பயன்படுத்தப் பார்க்கிறார்.

இவ்வாறு விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (இ-ஐ-6)

### இன்றும் கடைகள் திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 30
தீபாவளி தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமையும் வர்த்தக நிலையங்கள் திறந்திருக்கும் என்றும் —

தீபாவளி தினமான எதிர்வரும் புதன்கிழமை வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என்றும் — யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம் அறிவித்துள்ளது. (இ 4)

### இன்று முதல் சந்திரிகா தீவிர பிரசாரம்

கொழும்பு, ஒக். 30
இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் பிரதமர் சந்திரிகா ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபடுவார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org